மட்டக்களப்பின் கைவினைமரபுகளில் காலனியம் ஏற்படுத்தியதாக்கங்களும், அவைபாதுகாக்கப்பட வேண்டிய தேவைப்பாடுகளும்

திருமதி.பிரசாந்தி இளங்கோ. விரிவுரையாளர்.நுண்கலைத்துறை,கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஆய்வுச் சுருக்கம்

16ஆம் நூற்றாண்டளவில் உலகநாடுகளிடையேபெரும் தாக்கங்களை ஏற்படுத்திய செயல்வாதமாகக் காலனித்துவம் காணப்படுகிறது. இதன்கீழ் கி.பி.1505 – 1948 வரை இலங்கையும் காலனியஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்றது. தமது நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக ஐரோப்பிய ஆட்சியாளர்கள் காலனியநாடுகளின் மேல் கட்டமைத்துக் கொண்டசிந்தனைப்போக்குகள் காலனித்துவச் செயற்பாடுகளுக்குகாலாயின. இந்தச் செயற்பாடுகளின்மையமாகப் பொருளாதாரச் சுரண்டல் காணப்பட்டது. காலனிக்குடி நாடுகளிலிருந்து பொருளாதாரநன்மைகளை பெற்றுக் கொள்வதேகாலனிய ஆட்சியாளர்களின் பிரதானநோக்கமாககாணப்பட்டது. பல்வகைவளச்செறிவு கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதானபொருளீட்டல் செயன்முறைகளில் ஒன்றாகக் கைவினைத் தொழில்கள் சிறப்புடன் வளர்ந்துவந்துள்ளன. இலங்கையின் கைவினைப் பாரம்பரியம் காலனித்துவபொருளாதாரக் கொள்கைகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டபோது மட்டக்களப்பின் கைவினைப் பாரம்பரியத்திலும் இதன் தாக்கங்களைக் காணமுடிகின்றது. காலனித்துவக் கருத்தியல்கள் மட்டக்களப்பின் கைவினைமரபுகள் மீது ஏற்படுத்தியசாதக, பாதகமானதாக்கங்களை அடையாளப்படுத்துவதுடன் அவற்றைப் பாதுகாப்பதற்கான வழி முறைகளைத் தேடுவதும் இவ்வாய்வின் பிரச்சனைகளாக அமைந்துள்ளன. இவ்விடயங்கள் இதுவரைவிரிவான ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை. இதன் கீழ் காலனித்துவஆதிக்கத்திற்கு முன்னர் மட்டக்களப்பின் கைவினைமரபுகளின் நிலை, காலனிய ஆட்சிக்காலத்தில் அவற்றில் ஏற்பட்டதாக்கங்கள், காலனிய சூழலுக்குப் பின்னரானகைவினைகளின் நிலை, காலனியத் தாக்கங்களிலிருந்து இவற்றைபாதுகாக்க வேண்டிய தேவைகள் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன. இவ்வாய்வுகைவினைப் பொருட்களைப் பற்றியதாக அமைவதால் இங்கேபண்புசார் ஆய்வு முறை பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்வில் முதல் தர மூலங்களாக கள ஆய்வின் நேரடி அவதானம், ஆள்நிலை நேர்காணல் (In – depth Interviews),குழுநிலைக் கலந்துரையாடல் (Focus group discussion) தகவல்கள் என்பனவும், இரண்டாம் தரதரவுகளாக ஆய்வுகள், சஞ்சிகைகள், வலைதளக் கட்டுரைகள் (Data base) என்பனவும் அடங்கும். இவ்வாய்வு காலனித்துவசெயற்பாடுகள் கைவினைகளில் ஏற்படுத்தியதாக்கங்களை விளக்க முற்படுகின்றது. காலனித்துவகருத்தியல்கள் மட்டக்களப்பின் கைவினைமரபுகளில் அறிவியல் தொழில்நுட்பரீதியாக சில சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கும் அதேவேளை அதன் பாரம்பரியமரபுகளில் பாதகமான மாற்றங்களையும் ஏற்படுத்தி உள்ளன என்பதும் அவற்றின் மரபுகள் பாதுகாக்கப்பட்டு நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்றது போல் மாற்றியமைக்கப் பட வேண்டும் என்பதும் இவ்வாய்வின் முடிவாக அமைகின்றது.

திறவுச் சொற்கள்: *காலனித்துவம், கருத்தியல்கள், பாரம்பரியம், கைவினைமரபுகள்*

ஆய்வுப் பின்னணி

முனித வரலாற்றில் பலம் கொண்டவர்கள், பலவீனமானவர்களை அடக்கி ஆழும் செயற்பாடுகள் இடம் பெற்றுவந்துள்ளன. காலப்போக்கில் அரசுகள் தோன்றத் தொடங்கியபின்னர் இச்செயற்பாடுகள் இன்னும் தீவிரமடைந்தன. நாடுகள் தமதுஅதிகாரப் பலத்தைவெளிப்படுத்தத் தம்வசமிருந்த இராணுவ அடக்கு முறைகளைப் பிரயோகித்தன. இதனால் ஆயுதப் பலங்குன்றியநாடுகள் அடிமைப்படுத்தலுக்கு

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2026, IRJTSR

உள்ளாக்கப்பட்டன. இந்த செயற்பாடுகளில் ஐரோப்பிய நாடுகள் தீவிரம் காட்டத்தொடங்கின. நாடுகள் தமது அதிகார, இராணுவ, ஆயுதபலங்களைப் பயன்படுத்தி ஏனைய நாடுகளை அடிமைப்படுத்தி, அடக்கியாழும் இச்செயற்பாடுகள் காலப்போக்கில் 'காலனித்துவம்'(Colonialism)எனும் பதத்தால் சுட்டப்பட்டது. காலனியசெயற்பாட்டின் போது உள்ளூர் மக்கள் நேரடியாகஆளப்படுகின்றார்கள். காலனியத்துவத்தின் நோக்கமேகுடியேற்றநாடுகளின் வளங்கள்,உழைப்பு,சந்தைகள் முதலானவற்றில் ஆதிக்கம் செலுத்துவதனூடாகத் தம்மைப் பொருளாதாரவல்லரசுகளாகக்கட்டமைத்துக் கொள்வதாகும். 'பேரரசுகளின் தேட்டத்தில்,பொருள் ஆதாயங்களுக்கானஆசையின் உந்துதலேகாலனியத்தைவேகப்படுத்தியது. பொருளாதாரவளர்ச்சிஎன்பதுபுதியசெல்வத்தையம்,பொருள் கொள்ளும் சாதனைகளக்குரியசாத்தியங்களையும் உருவாக்கியது. இதனால் ஐரோப்பாமேற்குலகின் ஆற்றல் மிக்கசக்தியாகஉருவாகியது'எனும் போல்குட்மனின்கருத்துகாலனியத்தின் அடிப்படைநோக்கத்தைதுல்லியப்படுத்துகின்றது (1970:176).

இலங்கைதொடர்ச்சியாக மூன்றுஐரோப்பியநாடுகளால் காலனியத்திற்குஉட்படுத்தப்பட்டது. அதன்படி 1505 – 1658 வரைபோர்த்துக்கேயராலும், 1658 – 1796 வரைஒல்லாந்தராலும், 1796 – 1948 வரைபிரித்தானியராலும் இலங்கைகாலனியஆதிக்கத்திற்குஉட்பட்டிருந்தது. போர்த்துக்கேயர்,ஒல்லாந்தர்,பிரித்தானியர் ஆகிய மூன்றுகாலனித்துவஆட்சியாளர்களும் வர்த்தகநோக்கத்திற்காகவே இலங்கையில் தம்மைப் பலப்படுத்தியிருந்தனர். ஆனால் பிரித்தானியர் அரசியல் நிர்வாகச் செயற்பாடுகளில் பெரிதும் கவனம் செலுத்தினர். பிரித்தானியர் அரசியலில் ஏற்படுத்தியமாற்றங்கள்,சமூகங்களின் அடிக்கட்டுமானத்தில் மாற்றங்களைஉருவாக்கியது. இதனால் எற்பட்டமாற்றுச் சிந்தனைகள் பண்பாட்டின் பல கூறுகளிலும் தாக்கங்களைஏற்படுத்தியது.

1948 இல் பிரித்தானியஅரசு, இலங்கையைத் தமதுகாலனிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்துசுதந்திரத்தையும், சுயாட்சியையும் வழங்கிவிட்டுவெளியேறியது. ஆனாலும் நீண்டகாலமாகக்காலனியவாதிகளால் திணிக்கப்பட்டகாலனியசிந்தனைகளிலும் கருத்துருவாக்கங்களிலும் இருந்துமக்களால் அத்தனை இலகுவாகவிடுதலைபெறமுடியவில்லை. சுதந்திரமடைந்து 76 ஆண்டுகள் கடந்தபோதும்,காலனியச் சித்தார்த்தங்களில் நின்றுசிந்திக்கும் போக்கிலிருந்துவிடுபடமுடியாதபோக்கு ஏனைய மக்களைப் போலவே இலங்கைமக்களின் சிந்தனைகளிலும் படிந்துபோனது. கல்விக் கொள்கைகள், மதம், அரசியல், உணவுப்பழக்கங்கள், மொழி,கலைகள், கைவினைகள் எனப் பண்பாட்டுக் கூறுகளுக்குள் நின்றுகாலனியக் கருத்தியல்கள் இன்றும் கோலோச்சிக் கொண்டேஉள்ளன.

மட்டக்களப்புமாவட்டம்,காலனியஆதிக்கத்திற்குஉட்படுத்தப்பட்டபின்புசமூகத்தின் ஏனைய கூறுகளைப் போலவேகைவினைப் பாரம்பரியமும் பாதிப்பிற்குஉட்பட்டது. மட்டக்களப்பின் கைவினைப் பாரம்பரியமானதுவெறுமனேபாண்டங்களின் உற்பத்தியோடுமட்டுப்படுத்தப்படவில்லை. அதனைத்தாண்டிஅதனைஉருவாக்கும் சமூகம்,குலம், குடி,சாதிஎன்பவற்றின் நம்பிக்கைகள்,வழிபாடுகள்,ஐதீகங்கள்,மரபுகள்,என்பனகுறியீடுகளாகவும்,வர்ணங்கள்,வடிவங்கள்,அலங்காரங்களாகவும் இம் மக்களின் கைவினைகளில் வெளிப்படுகின்றன. உருவாக்கல் பொறிமுறைகள்,நுட்பங்கள் என்பனபார்த்தல்,பயிலுதல்,பங்குகொள்ளல் என்பவற்றினூடாகதலைமுறையாகக் கடத்தப்படும் பண்புகொண்டவை. குடும்பத்தின்,சமூகத்தின்,தேசத்தின் பொருளாதாரநிலைக்களனாய் அமைபவை. பாரம்பரியஉற்பத்திமுறைகளும்,உற்பத்திப் பொருட்களின் தரச்சிறப்பும்,அலங்காரநுட்பங்களும்,வடிவமைப்புகளும் மட்டக்களப்புக் கைவினைப் பாரம்பரியத்திற்குத்தனித்துவமான இடத்தினைஏற்படுத்தி இருந்தன. இத்தகையதனிச்சிறப்புடையமட்டக்களப்பின் கைவினைப் பாரம்பரியமானதுகாலனியச் செல்வாக்கிற்குஉட்படுத்தப்பட்டபோதுபலமாற்றங்களைத் தனக்குள் உள்வாங்கிக் கொள்கிறது. அவற்றின் வளர்சியிலும்,வீழ்ச்சியிலும் காலனியச் செயற்பாடுகள்தாக்கம்செலுத்தியிருக்கின்றன. இந்தஆய்வுகாலனித்துவக் கருத்துக்களின் தாக்கத்தால் மட்டக்களப்பின் கைவினைமரபுஎவ்வாறானமாற்றங்களுக்குஉட்பட்டதுஎன்பதையும் அவைஎவ்வாறுமீட்டெடுக்கப்படவேண்டும் என்பதையும் ஆய்வுக்குட்படுத்தியுள்ளது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2026, IRJTSR

ஆய்வுஎல்லை

மட்டக்களப்பில் பயிலப்படும் கைவினைமரபுகள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இந்தஆய்வின் எல்லைவரையறுக்கப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரச்சினை

இந்தஆய்வில் காலனித்துவப் பொருளாதாரக் கொள்கையும் அதுசார்ந்தகருத்தியல்களும் மட்டக்களப்புமாவட்டத்தின் கைவினைமரபுகளில் ஏற்படுத்தியதாக்கங்களையும்,அதனால் கைவினைத்துறை அடைந்தசாதக, பாதகமானநிலைமைகளையும் ஆராய்வதுடன், அவற்றைமீட்டெடுப்பதற்கான வழிமுறைகளையும் அடையாளப்படுத்த முயற்சிக்கின்றது. இதுவே இவ்வாய்வின் மையப்பிரச்சினையாகும்.

ஆய்வின் கருதுகோள்

காலனித்துவக் கருத்தியல் மட்டக்களப்பின் கைப்பணிமரபில் ஏற்படுத்தியபாதிப்புக்கள்,காலனியவாதிகளின் பொருளாதாரச் சுரண்டலைஅடிப்படையாகக் கொண்டுவிளங்கியதால், அதுமட்டக்களப்பின் சுதேசபொருளாதாரத்தையும், அதனை அடிப்படையாகக் கொண்டகைப்பணிமரபையும் பாதிப்பிற்கு உட்படுத்தியது.

ஆய்வின் நோக்கங்கள்

மட்டக்களப்பின் கைவினைப் பாரம்பரியத்தின் தனித்துவங்களைவிளங்கிக் கொள்ளுதல்,காலனித்துவம் அவற்றில் ஏற்படுத்தியபாதிப்புக்கள், காலனித்துவநீக்கத்தின் பின்னர் அவைஅடைந்துள்ளமாற்றங்கள், அவற்றைமீட்டெடுப்பதற்காகமுன்வைக்கக் கூடியபரிந்துரைகள் என்பனவற்றைக் கண்டறிவதைநோக்காகக் கொண்டுள்ளது.

ஆய்வுமுறையியல்

இவ்வாய்வானதுமட்டக்களப்புசமூகத்தினதுகைவினைப் பாரம்பரியத்தில் காலனித்துவம் ஏற்படுத்தியதாக்கங்கள் பற்றியதாகஅமைகின்றது. அதனால் பண்புசார் ஆய்வுமுறை (Quntitative method) பயன்படுத்தப்படுகின்றது. மட்டக்களப்புமாவட்டத்தின் தனித்துவமானகைவினைப் பாரம்பரியத்தில் காலனியக் கருத்தியல்கள் ஏற்படுத்தியதாக்கங்கள் கண்டறியப்படவேண்டிஉள்ளமையால் கண்டறிஆய்வுமுறையும்,கைவினைகள் உருவாக்கப்படும் களங்களுக்குநேரடியாகசென்றுஅவதானிப்பு,பேட்டிகாணல் போன்றவை மூலம் தரவுகள் சேகரிக்கப்படவேண்டிஉள்ளமையால் கள ஆய்வுமுறையும் இவ்வாய்வில் ஆய்வுமுறையியல்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாய்விற்கானமுதலாம் நிலைத்தரவுகளாகக்களஆய்வின்போதுபெறப்பட்டஅவதானிப்பு,நேர்காணல்,கலந்துரையாடல்,என்பனவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள்,ஆய்வுக்கட்டுரைகள்,சஞ்சிகைகள்,பத்திரிகைகள், இலத்திரனியல் நூல்கள்,மற்றும் சமூகவலைத்தளங்கள் ஆகியவற்றிலிருந்துகிடைத்ததகவல்களும் இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்றன.

ஆய்வுமீளாய்வு

இந்தஆய்வுகாலனித்துவக் கருத்தியல்கள் மட்டக்களப்புக் கைவினைமரபில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் பற்றிப் பேசுவதாகும். காலனித்துவம் தொடர்பாகஅதிகளவில் ஆய்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. அவைவரலாற்றுரீதியாகவும்,அரசியல்,பொருளாதாரரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அப்பின்னணியில் இலங்கையில் காலனியம் பற்றியஆய்வுகளில்,'பிரிட்டிஷ்காலனித்துவத் தலையீடுமற்றும் சமகால இலங்கையில் அதன் விளைவுகள்' (Colonial Intervention and its consequences on contemporary Sri Lanka) பற்றிடக்மர் ஜனிகோவா (Dagmar Janikova)மேற்கொண்டஆய்வுமுக்கியமானது. இவ்வாய்வில் இலங்கையின் கல்வி,விவசாயம்,சமூகமற்றும் பொருளாதாரக் கொள்கைகளில் காலனியம் ஏற்படுத்தியமாற்றங்களைஆராய்கின்றார். அத்துடன்ஆங்கிலேயர்இலங்கையைக்

கைப்பற்றியமைக்கானகாரணங்களையும், 150 ஆண்டுகாலத்தில் காலனியம் ஏற்படுத்தியமோதல்களையும் பகுப்பாய்வுசெய்கின்றார். இதனுடையநான்காவதுஅத்தியாயத்தில் போக்குவரத்து,தொடர்பாடல்,கட்டடக்கலைஎன்பனபற்றியும் ஐந்தாம் அத்தியாயத்தில் கல்விமற்றும் சமயம் பற்றியும் பேசியிருக்கின்றார்.

தாமில் ஆனந்தவிநாயகத்தால்மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் வரலாறு: காலனித்துவம்,சுதந்திரம்,மற்றும் மோதல்கள் (Sri Lanka's History: Colonialism, Independence, and Conflict)எனும் ஆய்வில், இலங்கையினுடையபூர்வீகக் குடிப்பரம்பல்களின் தோற்றம்,காலனித்துவத்தின் வருகை, இலங்கைமக்களைஆள்வதற்காகஅவர்கள் உருவாக்கியஅரசியலமைப்புக்கள்,சட்டமூலங்கள்,துணைநிர்வாகஅலகுகள்,அவற்றின் அதிகாரங்கள் பற்றிஆராய்ந்துள்ளார். இதுகாலனித்தும் ஏற்படுத்தியஅரசியல் ரீதியானதாக்கங்களைப் பிரதானப்படுத்தும் ஆய்வாகஅமைகின்றது.

எஸ்.ரணசிங்கவின் காலனித்துவகாலத்தில் இலங்கைப் பொருளாதாரம் பற்றியஒருவரலாற்றுஆய்வில் (A Historical Study of the Sri Lankan Economy During the Colonial) காலனித்துவகாலத்தில் நாட்டின் பொருளாதாரத்தைவளர்த்த,பாதித்தபெருளாதாரசக்திகளின் தன்மைகள் ஆராயப்பட்டுள்ளன. இலங்கையின் பாரம்பரியபொருளாதாரஅமைப்பின் விழ்ச்சியைப் பாதித்தகாரணங்கள் பற்றிஆய்வில் முக்கியகவனம் செலுத்தப்பட்டுளளது.

இலங்கையின் கைவினைபற்றியஆய்வுகள் சுற்றுலாத்துறையையும்,பொருளாதாரமேம்பாட்டையும் மையப்படுத்தியேஎழுந்துள்ளன. இவ்வாய்வுகளில் இசுறு கொஸ்வத்தே(IsuruKoswatte) என்பவரின் 'உலகத்தரத்திற்கு இலங்கைக் கைவினைப் பொருட்களைஊக்குவித்தல்'(Promoting Sri Lankan handicrafts to the global) எனும் ஆய்வுமுக்கியமானது. இவர் அதிகரித்துவரும் நுகர்வுத்தேவைகாரணமாககைவினைப் பொருட்களின் தேவைஅதிகரித்திருப்பதையும்,சந்தைகள் விரிவடைந்திருப்பதையும் பற்றிப் பேசுகின்றார். நாட்டிற்குவருமானத்தைஈட்டும் துறையாககைவினைகளைவளர்த்தெடுப்பதுபற்றியபொருளாதாரக் கண்ணோட்டமாகவே இவ்வாய்வுஅமைகின்றது.

ஆன்மரிடி.சில்வா (Annemari de Silva)தன்னுடைய'இலங்கையின் கைவினைக் கலைஞர்களும் அரசநிறுவனங்களும்'எனும் ஆய்விலே(Craft Artisans & state institutions in Sri Lanka)கைவினைப் பொருட்களைப் பாதுகாப்பதுபற்றியும்,அதற்கானஅரசகொள்கைகள்,ஆதரவுகள்,கடன்திட்டங்கள் பற்றியும்,கைவினைத் துறைகளிலுள்ளகொள்கைகள்,நடைமுறைகள் பற்றியும் ஆராய்கின்றார். மற்றும் கைவினைகளைச் சந்தைப்படுத்தல், டிஜிட்டல் சந்தைவாய்ப்புக்களைஉருவாக்குதல், இவை தொடர்பாகஎதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அவரதுஆய்வுப்புலம் விரிகின்றது.

கிராமியப் பொருளாதாரஅபிவிருத்தியில் பாரம்பரியதொழில் நிறுவனங்களின் பங்களிப்புப் பற்றியும்,வளர்முகநாடுகளின் பொருளாதாரத்தில் கைவினைகளேமுதுகெலும்புஎன்பதைகைவினைத் தொழில்களின் சிறப்புநோக்குடன் இலங்கையின் சிறியளவிலானபாரம்பரியதொழில்களின் நிலைத்தன்மை(Sustainability of small scale traditionalindustries in SriLanka – With special reference to the handicraft industry- 2015)எனும் தமதுஆய்வில் வணிகரீதியாகஆராய்கின்றனர் நவரெட்ண(T.L.Navaratne),ரெட்நாயககே (R.M.A.K.Ratnayake)ஆகிய இருவரும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்டஆய்வுமகாநாட்டின் 'பாரம்பரியம் அல்லதுஉருவாக்கம் - கைவினைப் பயிற்சிமற்றும் உரைகள் (Conference Proceedings; Tradition or Trans/ Formation? Craft, Practice and Discourse)அடங்கியஆய்வுக்கட்டுரைப் பதிப்பிலே,கண்டுபிடிப்பும் அழிப்பும்: யாழ்ப்பாணத்தின் நெசவுசமூகத்தினரின் சாதிஅடையாளம்,கல்முனைக் கடற்கரைதர்க்காபள்ளியின் கொடியும் அதன் கைவினைப் பாரம்பரியமும்,மரபாமாற்றமா?, இலங்கையில் பாரம்பபரியகைவினைகளும் அரசபோசிப்பும்,மரபும் மாற்றமும்:

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடிதட்டாரின் நகைவடிவமைப்புகள். சடங்கிலிருந்துசந்தைக்கு: பிலிமத்தலாவபித்தளைவேலைப்பாடுகளின் மரபும் மாற்றமும்,Craft and the Visvakarma craftsmen: historical perspectives from south India , Blood red: Slavery , Chintz , and the dye – root diggers of colonial Ceylon, Dye and painted cottons from Jaffna, The making of miniature painting as a national craft heritage , The role of a craft designer in a developing country , Analysis on design contribution to the traditional masks of Sri Lanka , Craft as Fine Art ஆகியகைவினைசார்ந்தஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

கைவினைகள்

பற்றியஆய்விலேதவிர்க்கமுடியாதநூலாகஆனந்தகுமாரசுவாமிஎழுதியமத்தியகாலசிங்களக்கலைகள் (Mediaeval Sinhalese Art-1956) எனும் நூல் காணப்படுகின்றது. இந்நூலில் மரவேலை,கற்களாலானவேலை,எலும்பு,கொம்பு,ஓடுகளை மூலப் பொருட்களாகக்கொண்டுஉருவாக்கப்படும் கைப்பணிகள், இரும்புவெண்கலப் பொருட்கள்,நெசவு,தையல் அலங்காரம்,துணிகளுக்குச் சாயமிடுதல் போன்ற இலங்கையில் பிரசித்திபெற்றிருக்கும் கைவினைகளின் ஆரம்பம்,வளர்ச்சி,உருவாக்கநுட்பங்கள்,அவற்றில் பயன்படுத்தப்படும் அலங்காரவடிவங்கள்,அவற்றின் அழகியல்,பயன்பாடுஎன்பனபற்றிமிகநுணுக்கமாகவிளக்கியுள்ளார் ஆசிரியர்.

சுதந்திரஆய்வுவட்டத்தினால் வெளியிட்பட்டுள்ளமொழிதல் ஆய்விதழிலிலே (தொகுதி:5,எண்:2.2018) வடிவேல் இன்பமோகன் அவர்களால் எழுதப்பட்ட'காலனித்துவ,பின்காலனித்துவகருத்தியலுக்குள் பழங்குடியினரின் கலைகள்'எனும் ஆய்வுக் கட்டுரையில் காலனித்துவக் கருத்தியல்கள்,காலனித்துவக் கருத்தியலுக்குள் பழங்குடியினரின் கலைகள்,பின்காலனித்துவமும் கலைகளும் என்பனபற்றியும்,காலனித்துவமும் அதுஉருவாக்கியகருத்தியல்கள் பற்றியும்,ஆக்கிரமிப்பு,பொருட்சுரண்டல்,கலாசாரப் பாதிப்பு,நாகரீகமயப்படுத்தல் செயற்பாடுகள்,மரபுரிமைகள் மாற்றத்திற்குள்ளாக்கப்படுதல்,பண்பாட்டுக் கலப்பு,என்பனபழங்குடியினரின்கலைகளில் ஏற்படுத்தியதாக்கங்கள் பற்றிமுழுமையாகவும் விரிவாகவும் ஆராய்ந்துள்ளார்.

மட்டக்களப்பின் கைவினைகள் பற்றிப் பேசும் போது,தங்கேஸ்வரிஅவர்களின் இரு நூல்கள் முக்கியம் பெறுகின்றன. முதலாவதுமட்டக்களப்புக் கலைவளம் (2007). இதில் மட்டக்களப்புகைவினைகளின் தனித்துவங்களையும்,அவற்றைக் கொள்வனவுசெய்வதில் அந்நியநாட்டவரிடம் காணப்பட்டநாட்டத்தையும் விளக்கியுள்ளார். மேலைநாடுகளில் இயந்திரங்களால் உற்பத்திசெய்யப்படும் பாவனைப் பொருட்களுக்குமத்தியில் கையினால் இழைத்தபாயும், கூடையும்,நெசவுத்துணிகளும்,மரச்செதுக்கல்களும் விலைமதிப்பற்றதாகத் தோன்றியதன்மைகளைவிளக்கியுள்ளார். கைவினைகளின் உற்பத்திகள் மூலம் அந்நியச் செலவாணிஅதிகரித்திருந்தநிலையையும் சுட்டிக்காட்டியுள்ளார். மற்றையநூலானகிழக்கிலங்கைபூர்வீகவரலாறு (2007) என்பதில்,வரலாற்றிற்குமுற்பட்டகாலத்தில் மட்டக்களப்புமாவட்டத்தில் காணப்பட்டமட்பாண்டங்கள் பற்றியகுறிப்புக்கள் கிடைக்கின்றன. பிணங்களைப் புதைத்தஈமத்தாழிகளும்,மட்பாண்டஉடைவுகளும் பற்றிக் குறிப்பிட்டுமட்டக்களப்பின் மட்பாண்டவரலாற்றின் தொன்மைகண்டறிவதற்கானஆதாரங்களாக இவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விருநூல்களிலும் மட்டக்களப்புக் கைவினைகளின் சிறப்பும்,தொன்மையும் பேசப்பட்டுள்ளது.

வெல்லவூர்க் கோபால் எழுதியமட்டக்களப்புவரலாறுஓர் அறிமுகம் (2005) எனும் நூலில்,மட்டக்களப்பில் சாதிரீதியாகசமூகங்கள் வரையறுக்கப்பட்டிருப்பதையும், இவர்கள் பின்பற்றியதொழில்கள் குலத்தொழில்கலாகவரையறுக்கப்பட்டுஅவற்றிற்கானகுலவிருதுகள் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடுப்படுகின்றது.. சோழப்படைகள் மட்டக்களப்பிற்குவந்தபோதுஅவர்களுடன் வந்தசெங்குந்தர் பற்றியும்,அவர்க;டாகமட்டக்களப்பின் பிரதானகோயில்களுக்குத் திரைச்சீலைகள் நெசவுசெய்யப்பட்டுவழங்கப்பட்டமைபற்றியும்,எவ்வாறுஅவர்கள் மட்டக்களப்புப் பிரதேசமெங்கும் பரம்பலடைந்துஅங்கெல்லாம் தமதுதொழிலைமுன்னெடுத்தார்கள் என்றும் நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2026, IRJTSR

எனவே இங்கேசெய்யப்பட்டஆய்வுகள், இலக்கியங்களின் மீளாய்வின் படிகைவினைகள் சார்ந்தோ,காலனித்தும் மட்டக்களப்புக் கைவினைமரபுகளில் ஏற்படுத்தியதாக்கங்கள் சார்ந்தோ இதுவரைமுழுமையாகஆய்வுசெய்யப்படாமைமட்டக்களப்புக் கைவினைகள் சார்ந்தஆய்வுப் புலத்தில் இடைவெளியாகவேஉள்ளது. .

மட்டக்களப்பின் சமூகப்,பண்பாட்டு,அரசியல்,கலை,கல்விச் செயற்பாடுகளில் பாரியமாற்றங்களைஏற்படுத்தியகாலனித்துவமும் அதுஉருவாக்கியகருத்தியல்களும்,கைவினைமரபுகளில் ஏற்படுத்தியுள்ளமாற்றங்கள் தொடர்பான இவ்வாய்வானதுநுண்கலைத்துறைஆய்வுப் பரப்பிலும்,மட்டக்களப்பின் தனித்துவங்களைஅடையாளம் காணுகின்றசமூகவியல் நோக்கிலும் இடைவெளியாகியுள்ளபலபகுதிகளைநிரப்புகின்றதுஎனும் வகையிலும் இவ்வாய்வுமுக்கியம் பெறுகின்றதுஎனக் கொள்ளமுடியும்.

கண்டுபிடிப்பும் பெறுபேறுகளும்.

காலனித்துவத்திற்குமுன்னர் மட்டக்களப்பின் கைவினைமரபுகள்.

மட்டக்களப்புமக்கள் வரலாற்றுக் காலம் முதல் தமதுபிரதேசத்தின் பிரத்தியேகமான சூழலுக்குள்,பண்பாட்டுத் தனித்துவங்களுடன் வாழ்ந்துவருகின்றனர். இதனைகாலனியஆட்சிக்குமுன்னர் உள்ளநிலைமைகள் புலப்படுத்தியுள்ளன. மக்களின் வாழ்க்கைக்கும்,வழிபாட்டிற்கும் தேவையானபொருள்கள் கைத்திறன் சிறப்புடையோரால் உருவாக்கப்பட்டு,பயன்படுத்தப்பட்டுள்ளன.

தேவைக்குமேலதிகமாகப் பொருள்களைஉருவாக்கிச் சேமித்துவைக்கும் வழக்கம் இவர்களிடம் இருக்கவில்லை. பிரதேசம் வளச் செழுமையுடையதாகக் காணப்பட்டபோதும் வளங்கள் பற்றியபேண்தகுசிந்தனைகைவினைசெயற்பாடுகளின் போதுபேணப்பட்டிருந்தது. நீண்டகாலத் தேவையைகருத்தில் கொண்டுபொருள்கள் உருவாக்கப்படவில்லை. தேவைகளின் போதுபுதிதாகப் பொருள்களைஉற்பத்திசெய்துபயன்படுத்தும் பண்பாட்டுநடைமுறைஆரம்பகாலமக்களிடம் காணப்பட்டது. இதனால் சமூகத்தில் பயன்பாட்டுப் பொருள்களின் தேவைஎப்போதும் நிலவியது. ஆரம்பகாலமிருந்தேமட்டக்களப்புமாவட்டத்திலேகைவினைஉற்பத்திச் செயற்பாடுகள் எப்போதும் உயிர்ப்புடன் காணப்பட்டன. கைவினையாளர்களுக்கானசமூகஅந்தஸ்தும் உயர் நிலையில் இருந்தது.

பொருள்களின் உருவாக்கல் மீதானஅனுபவஅறிவுஉயர்தொழில் நுட்பத்தைவெளிப்படுத்தியிருந்தது. வனைசில்லுத் தொழில்நுட்பமும், சூளையை அமைத்துஉரியவெப்பநிலையில் பாத்திரங்களைச் சுட்டெடுக்கும் பிரயோகரீதியிலானஅறிவையும் சிறந்தமுறையில் மண்பாண்டங்கள் மீதுகையாண்டு இருந்தமை இதற்குசான்றாகும். கைவினையாளர்கள் பொருள்களைஉற்பத்திசெய்ததுடன்,அவற்றிற்குத் தேவையானதொழில்நுட்பஉபகரணங்களையும் உருவாக்கியுள்ளனர். காலனியவாதிகள் தமதுதேவைகளைப்பூர்த்திசெய்வதற்காகவும்,பொருளாதாரநலனைத் துரிதப்படுத்தவும் இயந்திரங்களைஅறிமுகப்படுத்தியகாலம்வரைகைவினைஉற்பத்திகளில் இத்தகையதொழில்நுட்பசாதனங்களின் பாவனைநீடித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பின் கைவினைமரபுகளைப் பொறுத்தவரைபாரம்பரியதொழில்நுட்பத்தைக் கொண்டுதயாரிக்கப்படும் களிமண் பாத்திரங்கள்,கைத்தறிப் புடவைகள், இயற்கைச் சாயங்கள்,பன்பாய்கள்,தும்புப் பொருள்கள் ஆகியற்றிற்குஅன்றும் இன்றும் உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் கேள்விநிலவிவருவதுகுறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டகைவினைஉபகரணங்கள் யாவும் மட்டக்களப்பின் சீதோஷண நிலைக்குப் பொருத்தமான மூலப் பொருள்களைக் கொண்டிருந்தன. இவைஅனைத்தும் இயற்கைபொருள்களிலிருந்துஉருவாக்கம் பெற்றிருந்தன. இதனால் அவைபாவனையாளர்களின் ஆரோக்கியமேம்பாட்டிலும் செல்வாக்குச் செலுத்தின. இறக்குமதிக் கொள்கைகளின் கீழ் நாட்டின் சீதோஷணத்தையும்,மக்களின் உடல் ஆரோக்கியத்தையும் கருத்தில் கொள்ளாதபொலித்தின்,பிளாஸ்டிக்,நான்ஸ்டிக் போன்றபொருள்களின் இறக்குமதிவரைபெரும்பாலானசமூகங்களில் பாரம்பரியக் கைவினைப் பொருள்களேபுழங்குபொருள்களாக

இருந்துள்ளன.

ஒரு மூலப் பொருளைப் பயன்படுத்திவெவ்வேறுதேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியபலவிதஉபகரணங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. உணவைச் சமைக்கவும்,சமைத்தஉணவுகளைப் பாதுகாக்கவும்,பரிமாறவும்,கொண்டுசெல்லவும்,பொருள்களைச் சேமிக்கவும்,எனவெவ்வேறுதேவைகளைநிறைவேற்றிக் கொள்ளபல்வேறுஅளவுகளிலும்,வடிவங்களிலும் பொருள்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. மண்பாண்டஉற்பத்தி, பனை சார் பொருள்கள்,தும்பு,மரவேலைபோன்றவைஒன்றிலிருந்துஒன்றுதனித்துவமானஉருவாக்கல் பண்புகளைக் கொண்டவை. இதனைஉருவாக்கும் கைவினைஞர்கள் ஏட்டுக் கல்வி இன்றி,பார்த்தல்,கேட்டல்,செய்துகாட்டல் ஆகியஅனுபவமுறைகளைஅடிப்படையாகக் கொண்டுஒவ்வொரு மூலப் பொருளிலும் பிரத்தியேகமானஉருவாக்கல் பொறிமுறைகளில் ஈடுபட்டுள்ளனர். இவை ஒருசமூகத்தின் அறிவை,நுட்பங்களை,உருவாக்குபவர் திறமையினை நூற்றாண்டுகள் கடந்தும் வெளிப்படுத்திநிற்கின்றன. கிராமப் புறங்களில் அன்றிலிருந்து இன்றுவரை இயந்திரங்களின் பிரயோகம் இன்றிக் கைகளால் தயாரிக்கப்படும் மட்கலங்கள், பனை,பன் சார் உற்பத்திகள்,பிரம்புப் பொருள்கள்,தும்புஉற்பத்தி,போன்றவற்றின் கையளிக்கையிலும் கற்றுக் கொள்ளலிலும் அனுபவஅறிவேஅடிப்படையாக இருந்துள்ளது. இதனைதொழில்சார் பாரம்பரியங்களுக்காகஉருவாக்கப்பட்டகைவினைப் பொருள்களிலும் காணலாம். மீன்பிடியும்,விவசாயமும் ஆரம்பகாலமட்டக்களப்பில் முக்கியம் பெற்றிருந்ததால் அவற்றிற்குத் தேவையானகரப்புமீன்கூடைகள்,தோணிகள்,சவள்,நண்டுக்கூடு,ஓராக்கூடு, ஏர்,கலப்பை,வெட்டுக் கத்திகள்,பன் பெட்டிகள்,சுளகுகள்,சாக்குப்பைகள் போன்றவற்றின் உருவாக்கம் இவர்களிடம் தொழில் ரீதியாகமுக்கியம் பெற்றிருந்தன. மட்டக்களப்புமக்கள் தம் தொழிலுக்கும் வாழ்வியல் தேவைகளுக்கும் வேண்டியஅனைத்துப் பொருள்களையும் தம் அறிவுதிறனைப் பிரயோகித்துதாமேஉருவாக்கிப் பயன்படுத்திவந்துள்ளனர். ஒவ்வொருதொழிலினதும் பன்முகத் தேவைகளுக்கானபொருள்கள் ஒவ்வொன்றும் மிகவும் நுட்பமாகவும் தனித்துவமாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. பொருள்களைஉருவாக்குவதற்காகஉறுதியானஒற்றை இலக்கணவிதிமுறைகள் எவையும் இங்குபின்பற்றப்படவில்லை. பண்பாட்டுச் சூழல்,இயற்கைச்சூழல்,ஆகியவற்றிற்கும்,பயன்பாட்டிற்கும் ஏற்பநெகிழ்வானவிதிமுறைகளையும்,உருவாக்கல் பொறிமுறைகளையும் பயன்படுத்திபொருள்கள் உற்பத்திசெய்யப்பட்டிருந்தன.

ஆரம்பகாலத்தில் சடங்குகளும்,வாழ்வியலும்வேறாகக் காணப்படவில்லை. இதனால் மதவழிபாடுகளைநிறைவேற்றும் பொருட்டும் பல்வேறுகைவினைப் பொருள்கள் உற்பத்திசெய்யப்பட்டிருந்தன. மண் விளக்குகள்,தூபதீபங்கள்,கடவுளின் முகக் கவசங்கள்,ஆயுதங்கள்,ஆலயங்களின் கொடிமரங்கள்,திரைச்சீலைகள்,தேருக்கானவடக்கயிறுகள்,தோரணங்கள்,பனையோலைப் பெட்டிகள்,பாய்கள்,மண் சட்டிகள்,வெண்கலப் பொருள்கள்,மரத்தாலானசிலுவைகள்,மெழுகுவர்த்திஏந்தனங்கள்,போன்றவற்றை இவற்றிற்குஉதாரணமாககுறிப்பிடலாம். இவைபண்பாட்டின் பிரதிபலிப்பாகஅமைந்திருந்ததுடன் பண்பாட்டிற்கும்,பாண்டங்களின் உற்பத்திக்குமான இடைத்தொடர்பையும் வெளிப்படுத்தின. பொருள்களைத் தயாரிக்கும் போதுசெய்யப்படும் வழிபாடுகள்,ஆசாரங்கள்,செயன்முறைகள் என்பனஅந்தஉற்பத்திச் சமூகத்தின் ஆன்மீகச் சிந்தனைகள்,மதவிழுமியங்கள்,நம்பிக்கைகள்ஆகியவற்றுடன்நெருக்கமானதொடர்புகளைக் கொண்டிருந்துள்ளன.

உற்பத்திகள் வெறும் பயன்பாட்டுப் பொருள்களாகமட்டும் கருதப்படவில்லை. அவைஒற்றைப் பொருண்மையைஉணர்த்துவனவாக இல்லாமல் பல்வேறுபண்பாட்டுநடவடிக்கைகளோடுதொடர்புபட்டுப் பன்மைப் பொருண்மையைஉணர்த்துவனவாகத் திகழ்ந்தன. கைவினைப் பொருள்கள் அவைஉருவாக்கப்பட்டசமூகத்தின் வாழ்வியல்,மரபுகள்,சுற்றுச்சூழல் தொடர்புகள்மற்றும் கலைநயத்தைப் பிரதிபலிப்பனவாகவும் காணப்பட்டன. இக்கைவினைகள் மக்களின் தொன்மையானவாழ்க்கைமரபுகளிலிருந்துபிறந்தபண்பாட்டுக் கூறுகளாகவும்,பிராந்தியத்தின் சூழல்,வரலாறு,மரபுகள் மற்றும் மதிப்புகளைப் பிரதிபலிப்பனவாகவும் அமைந்திருந்தன. பொருள்களின் வடிவங்களிலும்,அலங்காரங்களிலும்இவற்றைக் காணமுடிகின்றது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

பன்பாய்களில் உருவாக்கப்பட்டகோப்பிக்கொட்டை,கரிக்குருவி,ஈரப்பிலாக்காய்,உக்கட்டுபோன்ற சூழலியல் உருவங்களிலும்,மரத்தாலானவாசல் கதவுகளில் கடையப்படும் பாடும் மீன்,பாவைவிளக்குகள்,நிறைகுடஅமைப்புகள் என்பவற்றிலும் ஆபரணங்களில் பொறிக்கப்படும் சங்கு,சூரியன்,சந்திரன்,பஞ்சாயுதங்கள்,தாமரை,கடவுள் வடிவங்கள்,மட்பாண்டங்களில் வரையப்படும் கோலங்கள்,மாவிலைஅலங்காரங்கள் போன்றவற்றையும் இவற்றிற்குஉதாரணங்களாகக் காட்டலாம். இதன் மூலம் கைவினைகள் பணமதிப்புடையசந்தைப் பொருள்களாகமட்டுமல்லாமல் பண்பாட்டுநடவடிக்கைகளின் போதுபரிவர்த்தனைமதிப்புடையதாகவும் விளங்கியிருக்கின்றது.

காலனியஆதிக்கத்தின் முன்னரானமட்டக்களப்பின் கைவினைஉற்பத்திச் செயற்பாடானதுதனியாள் முயற்சியாகஅல்லாமல் உற்பத்தியாளர்,குடும்பம்,அயலவர்கள்,சமூகம் என்பவை இணைந்த கூட்டுச் செயற்பாடாகஅமைவதைக் காணலாம். இதுஒருநிறுவனப்படுத்தப்பட்டசெயற்பாடாகஅமைந்திருந்தது. இவைஉற்பத்திச் செயற்பாடாகமட்டுமல்லாமல் குடும்பம் எனும் நிறுவனத்தில் மையம் கொண்டு இயங்கும் ஒருவாழ்க்கைமுறையாகவேகாணப்பட்டுள்ளது.குடும்பத்திலுள்ளஆண்கள்,பெண்கள்,சிறுவர்கள்,பெரியோர்கள் எனஒவ்வொருவரும் கைவினைப் பொருள் உருவாக்கும் செயல் முறையான மூலப் பொருளைப் பெறுவதுதொடக்கம்,அதுமுடிவுப்பொருளாகஉருவாகி,விற்பனைச் சந்தையைஅடைவதுவரையிலானதொடர்செயற்பாடுகளில் தங்கள் இயலுமைக்கேற்பபங்களிப்பைச் செய்தனர். இந்தசெயற்பாடுகள் அனுபவரீதியானதலைமுறைக் கையளிப்பிற்கும்,பரவலாக்கத்திற்கும் காரணமாய் அமைந்தன.

மாவட்டத்தின் புவியியல்,தரைத்தோற்றநிலமைகள் காரணமாகஒவ்வொருகிராமங்களும் தனித்துவமானவளச் சிறப்புடன் காணப்பட்டது. இதுஅப்பிரதேசத்தில் உருவாக்கப்பட்டகைவினைப் பொருள்களின் சிறப்பிற்கும் காரணமாய் அமைந்தது. இதனால் சிலபொருள்களைக் குறிப்பிட்டகிராமங்களுக்குதேடிச் சென்றுமக்கள் கொள்வனவுசெய்யும் நிலைகாணப்பட்டது. புதுக்குடியிருப்புபிரம்புப் பொருள்களுக்கும்,கைத்தறிப் பொருள்களுக்குமருதமுனையும்,களிமண் பாத்திரங்களுக்குஏறாவூர்,பன் பாய்களுக்குகாங்கேயனோடைஎனதனிச் சிறப்புடன் கைவினைகள் உருவாக்கம் பெற்றிருந்தன. மூலப் பொருள்களுடன் அப்பிரதேசஉற்பத்தியாளர்களின் உருவாக்கல் தேர்ச்சியும்,நுட்பங்களும் இதற்கானகாரணங்களாய் அமைந்திருந்தன.

காலனியஆட்சிக் காலத்தில் மட்டக்களப்புகைவினைப் பாரம்பரியம்

உற்பத்திமுறைகளும்,உற்பத்திப் பொருள்களின் தரச்சிறப்பும்,அலங்காரநுட்பங்களும்,வடிவமைப்புகளும் மட்டக்களப்புக் கைவினைப் பாரம்பரியத்திற்குத் தனித்துவமான இடத்தினைஏற்படுத்தி இருந்தன. வளச்சிறப்புடன் பேணப்பட்டபாரம்பரியக் கைவினைமரபுகளின் மீதுகாலனியம் ஏற்படுத்தியதாக்கங்கள் அவற்றின் வளர்சியிலும்,வீழ்ச்சியிலும் தாக்கம் செலுத்தியிருக்கின்றன.

காலனியஆட்சியாளர்கள் தமக்கானபொருளாதாரத்தைஈட்டிக் கொள்ளும் துறைகளில் ஒன்றாகக் கைவினைகளைப் பயன்படுத்தியிருந்தனர். மூலப் பொருள்கள் மீதானவரிகளைவிதித்ததோடு,உற்பத்திப் பொருள்களைஏற்றுமதிசெய்வதிலும் தீவிரம் காட்டினர். ஏற்றுமதிவருவாயைஅதிகரிப்பதற்காககைவினைசார்ந்ததுறைகளைஅபிவிருத்திசெய்ததோடு,உற்பத்திகளுக்கான மூலப்பொருள்களையும் இறக்குமதிசெய்தனர். இதுஒருபுறம் கைவினைத்துறையில் அபிவிருத்தியைப் பதிவுசெய்தாலும்,மறுபுறம் சுதேசமக்களின் தேவைகளுக்கும், இரசனைகளுக்குமாகஉற்பத்திசெய்யப்பட்டபொருள்களைகாலனியஆட்சியாளர்களினதும்,மேலைத்தேயமக்களின தும் தேவைகளுக்கும், இரசனைகளுக்கும் பொருத்தமாகஉற்பத்திசெய்யவேண்டியதேவைஏற்பட்டது.

ஒருகுறிப்பிட்டபகுதியைச் சேர்ந்தகைவினையாளர்கள் அப்பகுதிமக்களுக்கானபயன்பாட்டுப் பொருள்களைஉருவாக்கிக் கொடுப்பதைதமதுசமூகப் பொறுப்பாகக்கருதிச் செயற்பட்டுவந்தனர். ஆனால் படிநிலைகளாகவகுக்கப்பட்டுஅவர்களுக்குரியசமூகப் பொறுப்புகள் பிரித்தளிக்கப்பட்டிருந்தமட்டக்களப்பின் சமூகக் கட்டமைப்பில் காலனியஅதிகாரங்கள் மாற்றங்களைஏற்படுத்தின. இதுகைவினையாளர்களின் சக மக்களுக்காககைவினைப் பொருள்களைஉருவாக்குதல் எனும் சமூகப் பொறுப்பினை,நுகர்வோரின்

தேவைகளைநிறைவுசெய்யும் சந்தைப் பொறுப்பாகமாற்றியது. மத்தியதரமக்களினதும்,காலனியக் கம்பனிகளினதும்,அரசநிறுவனங்களினதும் பயன்பாட்டுத் தேவைகளைநிறைவுசெய்யும் கைவினையாளர்கள் சக மக்களிடமிருந்துஅந்நியப்பட்டுப் போகும் நிலைஉருவானது. இதனால் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமானஇடைவெளியைக் காலனியச் செயற்பாடுகள் அதிகரித்தன.

பொருளாதாரநலன் வேண்டிகைவினைத்துறையில் ஏற்படுத்தப்பட்டபிறிதொருமாற்றம் இயந்திரமயப்படுத்தல். இயந்திரங்களின் வருகை,பாரம்பரியகைவினைஉற்பத்திமுறைகளில் பாய்ச்சல் முறையானவளர்ச்சியைப் பதிவுசெய்தது. குறுகியநேரத்தில்,குறைந்தளவுமனிதவளத்தைப் பயன்படுத்திஅதிகளவுஉற்பத்திகளைமேற்கொள்ள இயந்திரங்கள் உதவின. இதனால் குறைந்தமுதலீட்டில் கூடியளவு இலாபத்தைபெற்றுக் கொள்ளும் சாதகநிலைகள் உருவாகின. ஆயினும் இந்நிலைமைகைவினைஉற்பத்திமுறைகளில் பலவிதமானபிரதிகூலங்களையும் ஏற்படுத்தின.

உற்பத்தியாளர்கள் தமதுஅறிவு,திறன் தேர்ச்சியைக் கொண்டுபொருள்களைஉற்பத்திசெய்யதொழில்நுட்பம் சார்ந்த சூழல் நேயமானபொறிகளைஉருவாக்கிப் பயன்படுத்தினர். ஆடைகளைநெசவுசெய்வதற்குத் தேவையானகைத்தறிகள் கையினால் நூல் நூற்கும் இராட்டைகள் மட்பாண்டத் தயாரிப்புகளுக்கானவனைசில்லு,அறுவடைகளுக்குத் தேவையான ஏர்,கலப்பை,மீன்கூடுகள்,ஓராக் கூடுகள் போன்றனவும் பயன்பாட்டில்இருந்துள்ளன. இந்தமுறைகளை இயந்திரங்களின் அறிமுகம் பயன்பாட்டில் இருந்துதூரப்படுத்தியது.முழுவதும் மனிதவலுவின் பயன்பாட்டில் இயக்கப்பட்ட இயந்திரங்களுக்குப் பதிலாகமின்தறிகள்,மின்சாரத்தில் நூல் சுற்றும்பொறிகள்,மின்சாரவனைசில்லுகள்,அறுவடை,விதைப்புகளுக்கான இயந்திரங்கள்,மின்சாரத்தில் இயங்கும் பருத்திமனைகள் போன்றனஅறிமுகப்படுத்தப்பட்டன. பாரம்பரியதொழில்நுட்பப் பொறிமுறைகள் யாவும் மனிதஉடல் உழைப்பிலேயே இயங்கக் கூடியதாகவடிவமைக்கப்பட்டிருந்தன. கைத்தறிகள், இராட்டைகள்,பருத்திமனை,வனைசில்லுகள் என்பனமனிதவலுவிலேயே இயங்கின. கைத்தறியின் செயன்முறைப் பிரயோகத்தின் போதுவெளிப்படும் உடல் தசைநார்களின் செயற்பாடு இதனைநன்குபுலப்படுத்தும்.காலனித்துவம் உள்நுழைத்தமின்சார இயந்திரங்கள்,மின்சாரம் மூலம் இயங்குநிலைக்குவரக்கூடியவை. இதுபாரம்பரியஉற்பத்திகளின் போதுகிடைத்தஉடல் உழைப்பையும்,அதனால் கிடைத்தஆரோக்கியமானவாழ்க்கைமுறையையும் மாற்றியது.

காலனியர்கள் அறிமுகப்படுத்திய இயந்திரநாகரிக்தின் விளைவுகள் பற்றிபேராசிரியர் பரமசிவன்குறிப்பிடும் கருத்துமுக்கியமானது. 'ஐரோப்பியவிஞ்ஞானத்தின் விளைவாக இயந்திரநாகரீகம் பிறந்தது. நமதுபாரம்பரியபொருள் உற்பத்திஎன்பதுதொழில்நுட்பத்தைஅடிப்படையாகக் கொண்டது. புதிய இயந்திரநாகரிகம் விஞ்ஞானத்தைஅடிப்படையாகக் கொண்டது. இந்தப் புதுவகைஉற்பத்தியில் சக்கரத்தின் அரைக்கால் செய்பவர்கள் அதைமட்டுமேசெய்துகொண்டிருந்தனர். சக்கரத்தோடுஅரைக்காலை இணைக்கும் திருகாணிசெய்பவர் அதைமட்டுமேசெய்கின்றார். வேலைப் பிரிவினை (Division of Labor) என்பதுவிஞ்ஞானஉற்பத்தியின் அடிப்படையாகப் போய்விட்டது. இந்தப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டவர்களிடத்தில் சக்கரம் பற்றியோசக்கரத்தால் தாங்கப்படும் வண்டியைப் பற்றியோஒருமுழுமையானபார்வை இருக்க இடம் இல்லாமல் போகின்றது. ஆனால் பாரம்பரியமாகத் தொழில்நுட்பஅடிப்படையில் வண்டிசெய்பவர் சக்கரத்தில் உறுப்புகள் பற்றிமட்டும் அல்லாதுஅச்சு,அடிமரம்,நுகக்கால் குச்சிவரையானபொருள் அறிவையும்,அவற்றிற்குரியவெவ்வேறுமரங்களைப் பற்றியஅறிவையும் பெற்றிருந்தார். ஆக்கப்படும் பொருள் பற்றியமுழுமையானபார்வைமரபுவழிதொழில்நுட்பத்தில் அமைந்திருந்தது. மாறாகபுதியவிஞ்ஞானம் வேலைபிரிவினை மூலம் அதிலிருந்துமனிதனின் விலக்கிவைத்தது'எனவிளக்குகின்றார் (2023:119).

உற்பத்தியின் போதுபொருள்கள் சார்ந்தவடிவமைப்புகள்,அலங்காரங்கள் என்பனகுறிப்பிட்டசமூகத்தின் பண்பாட்டுத் தேவைகளையும்,அழகியலுணர்வையும் அடிப்படையாக் கொண்டவை. நுகர்வோரின் தேவைகளையும் இரசனையையும் கருத்தில் கொண்டுகைவினையாளர்கள்தம்முடையகற்பனைஅழகுணர்வு,வடிவமைப்பு, இரசனை,நிறத்தெரிவு, இவற்றின்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2026, IRJTSR

ஒருங்கிணைப்புஎன்பவற்றைக் கொண்டுஉருவாக்குபவை. இயந்திரப் பிரயோகம்இவற்றை இல்லாமல் செய்துவிடுகின்றது. செய்நிரலாக்கம் செய்யப்பட்ட இயந்திரங்கள் நிமிடத்தில் ஒன்றைப் போன்றுநூற்றுக்கணக்கானபொருள்களைஉற்பத்திசெய்துவிடுகின்றமைஒவ்வொருபொருள்களையும் தனித்துவத்துடன் உருவாக்கும் பாரம்பரியகைவினைசார் உற்பத்தியாளர்களுக்குபெரும் சவாலாகமாறிவிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

காலனியம் உருவாக்கியநகரமயமாக்கல்,நவீனமயமாக்கல்,நிறுவனமயமயாக்கல் என்பனகுறிப்பிட்டசாதிகளிடமும்,கிராமங்களிலும் அவைகளுக்கேயுரியதனித்துவமானநியமங்களுடன் உருவாக்கப்பட்டகுறிப்பிட்டகைவினைப் பாரம்பரியங்களைஅனைவருக்கும்,அனைத்துத் தொழில்களையும் உரியதாக்கும் பொதுவெளிக்குள் கொண்டுவந்தன. அந்தந்தகிராமங்களின் சிறப்புகளுடன் மேறகொள்ளப்பட்டகைவினைகள் தொழிற்சாலைகளுக்குள் உற்பத்தியாகத் தொடங்கின. இதனால் குலங்களுக்கும்,சாதிகளுக்கும்,பிரதேசங்களுக்குமானதனித்துவஅடையாளங்கள் இழக்கப்பட்டுபொதுமைப்படுத்தப்பட்டன. சாதிஅமைப்புகளிலும்,பிரதேசங்களிலும் இருந்துவிடுபட்டகைவினைமரபுகள் அவற்றிற்குரியசொந்தமக்களிடமிருந்தேஅந்நியப்படுத்தப்படும் நிலைமைஉருவாக்கியது. கைவினைகள் குலங்கள்,குடிகள்,பிராந்தியங்களின் அடையாளங்களாகஅல்லாமல் கற்பனையும்,புதுமையும் கொண்டஅலங்காரக் குறியீடுகளாகபொதுமைப்படுத்தப்பட்டன.

கைவினைப் பொருள்கள் பண்பாட்டுடனும்,அதுசார்ந்தநம்பிக்கைகள்,ஐதீகங்கள் என்பவற்றுடனும் நெருக்கமாகத் தொடர்புபட்டவை. அவை சூழலியல்,பண்பாட்டுத் தேவைகள் சார்ந்துபல்வேறுபொருண்மைத் தன்மைகளைப் பெற்றிருந்தன. களியால் உருவாக்கப்படும் ஒருபானைதைப்பொங்கல் பண்டிகையின் போது இயற்கையுடனானதொடர்பின் குறியீடாகவும்,திருமணத்தின் போதுமங்கலப் பொருளாகவும்,மரணச் சடங்கில் வாழ்வியலின் குறியீடாகவும்பரிமாணம் பெறுகின்றது. ஆனால் காலனியம் இவற்றைவெறும் பாண்டங்களாகவேகருதியது.நவீன மூலப் பொருள்களால் உருவானகைவினைகள் இத்தகையபல் பொருண்மைத் தளங்களாகக் கொள்ளமுடியாதநிலைமையும் காணப்பட்டது.

நவீன இயந்திரங்களும்,சிறப்புக் கருவிகளும் கொண்டுகைவினையாளர்களால் உற்பத்திசெய்யப்படும் பொருள்களின் அழகு,நேர்த்தி,அமைப்பு,சீர்மைஎனும் அழகியல் கூறுகள் பாரம்பரியஉற்பத்தியாளர்களிடம் தாக்கத்தைஏற்படுத்தின. பாரம்பரியஉற்பத்தியாளர்கள் தமதுஉருவாக்கல்களிலும் இவற்றைக் கொண்டுவருவதற்காகஅச்சுக்களைப் (Moulds)பயன்படுத்தினர். இதுகைகயால் ஒவ்வோன்றும் தனித்தன்மைகளுடன் உருவாக்கப்படும் கைவினைஉருவாக்கங்களை இல்லாமல் செய்ததுடன் ஒரேமாதிரியானவடிவங்கள் உருவாக்கப்படுவதற்கான சூழலையும் உருவாக்கியது.

மரபுவழித் தொழில்நுட்பஉற்பத்தியில் படைப்பவன்,நுகர்பவன் எனும் வேறுபாடுமிகக் குறைவாகவேகாணப்படுகின்றது. சிலகட்டங்களில் அவை இல்லாமலும் இருந்தன. ஆரம்பகாலங்களில் ஒவ்வொருவீடும் தொழிற்சாலையாக இருந்தது. தமக்குத் தேவையானபொருள்களைக் குடும்பமேஉற்பத்திசெய்துகொண்டது. தேவையானசந்தர்ப்பங்களில் அயலில் உள்ளவர்களின் உழைப்பும்,உதவிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன. உருவாக்கப்படும் பொருளின் தேவைக்கேற்க அயல் ஊர்களில் இருந்தும் திறமையானவர்கள் அழைக்கப்பட்டும் உற்பத்திகள் இடம் பெற்றன. இன்றும் மட்டக்களப்புகன்னன்குடாவில் தேர்களுக்கானவடக்கயிறுதிரிக்கப்படும் போது அயல் ஊர்களில் இருக்கும் அனுபவமும் திறமையும் கொண்டவர்கள் ஊர்ப் பெரியவர்களால் அழைப்புவிடுக்கப்பட்டுவரவழைக்கப்படுவதுகுறிப்பிடத்தக்கது. அயல் ஊர்களுக்கு இடையில் ஆரோக்கியமானஉறவுகள் உருவாகின. கைத்திறனும்,அறிவும் கொண்டவர்கள் மதிக்கப்பட்டனர். அவர்களுக்கானஅங்கீகாரம் வழங்கப்பட்டது. சிறியபொருள்களைக் கூட்டாகஉருவாக்கும் போதுஉழைப்பிற்கானஊதியமாகஉருவாக்கியபொருள்கள் பண்டமாற்றாகவழங்கப்பட்டன. கொண்டும்,கொடுத்தும் வாழும் சமூகஅமைப்பில் படைப்பவன்,நுகர்பவன் எனும் வேறுபாடு இனங்காட்டக் கூடியளவிற்குவெளித்தெரியவில்லை.

பொருளாதாரநலன்களுக்காகசெயற்பட்டகாலனியஆட்சியாளர்கள்,உற்பத்தியாளரிடம் இருந்துஉற்பத்திகளைப்

பெற்றுக் கம்பனிகளுக்குச் சொந்தமாக்கிவிட்டு,நுகர்வோரிடமிருந்துபணத்தைப் பெற்றுபொருள்களைவழங்கியது. இதுஉற்பத்தியாளர் - உற்பத்திப் பொருள் - நுகர்வோர் ஆகியவற்றிற்கான இடைத் தொடர்புகளை இல்லாமலாக்கியது. பொருள்களின் தரம்,வடிவமைப்புபற்றியநுகர்வோரின் குறை,நிறைகள் கருத்துக்கள் உற்பத்தியாளருக்குகிடைக்காமல் போயின. இதுஉற்பத்தியிலுள்ளபிழைகளையும். குறைபாடுகளையும் உற்பத்தியாளன் கண்டறியவும்,அதற்கானபுதியமாற்றீடுகளைக் கற்றுக் கொள்ளவும்,உற்பத்திகளில் பிரயோகித்துவாய்ப்புப் பார்க்கவும் முடியாதநிலையைஉற்பத்தியாளரிடையேஏற்படுத்தியிருந்தது. இதுஉற்பத்தியாளர்களின் கற்பனை,புதிதுபுனையும் தன்மை,மேம்பாடுஆகியவற்றிலும் பாதிப்பைஏற்படுத்தியது. பொருள் உற்பத்தியில் இருந்துவிலகும் ஒருசமூகத்தில் அதன் ஆசைகளும்,நம்பிக்கைகளும் கூட அதிலிருந்துவிலகிவிடுகின்றன. இதனால் காலனியச் செயற்பாடுகள் காரணமாகைவினைஉற்பத்திச் சமூகங்களின் அடுத்ததலைமுறையினரால் அண்மைக் காலமாகப் பணித்தொழில் (Service) சார்ந்தகல்வியேபெரிதும் விரும்பப்படும் நிலைஉருவாகத் தொடங்கியது.

காலனியக்குடிநாடுகளின் வளங்கள் சுரண்டப்பட்டதால் உள்ளூர் உற்பத்திகளுக்கான மூலப் பொருள்களுக்குபெருமளவுகேள்விநிலவியது. உற்பத்தியாளர்களால் அதிகளவுபணம் கொடுத்து இறக்குமதிசெய்யப்பட்ட மூலப் பொருள்களையோ,மேலதிகவரிகளைச் செலுத்திகாலனியக் கம்பனிகளிடமிருந்தவளங்களையோகொள்வனவுசெய்யவேண்டியநிலைகாணப்பட்டது. இதனால் முடிவுப் பொருள்களையும் அதிகளவுவிலைக்குநுகர்வோருக்குவழங்கவேண்டியநிலைஉருவாகியது. மக்கள் அதிகளவுபணம் கொடுத்து இப் பாரம்பரியபயன்பாட்டுப் பொருள்களைக் கொள்வனவுசெய்வதைவிடக் குறைந்தவிலையில் கிடைத்த இறக்குமதிப் பொருள்களில் நாட்டம் செலுத்தினர். இதுபாரம்பரியஉற்பத்தியாளரின் உற்பத்திமுயற்சிகளுக்குப் பெரும் சவாலாகஅமைந்தது. எனவேகாலனியர்களால் மேற்கொள்ளப்பட்டவளச் சுரண்டல்களும்,ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகளும் மட்டக்களப்புக் கைவினைசார் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் பாதிப்படையும் நிலையைத் தோற்றுவித்திருந்தது.

கைவினைஉற்பத்திச் செயற்பாட்டில் தலைமுறைக் கையளிப்பாகவும்,அனுபவத்தாலும் கிடைத்தஅறிவும்,செயன்முறைநுட்பங்களும் காலாவதியாக்கப்பட்டன. களியின் பக்குவத்திற்கேற்ப ஏனைய பொருள்களைச் சேர்க்கும் விகிதம்,சேர்வையின் பதநிலையைவிரல்களில் தொட்டுஅறியும் அனுபவம்,பொருள்களின் வகைகளுக்கேற்பகணமட்டஅளவுகளில் பனையோலைகளைவார்த்தெடுக்கும் நுட்பம்,தங்கத்தைகையில் எடுத்தும்,கண்களால் பார்த்தும் அவற்றின் தரத்தைஎடைபோடும் பக்குவம்,தங்கத்துடன் கனிமங்களைக் கலக்கும் அறிவு,அனுபவம்,பொருள்களுக்கேற்பமரங்களின் தன்மையை இனம் காணும் அனுபவஎன்பனகைவினைஉருவாக்கங்களில் மிகவும் பெறுமதியானவை. நிறைகளைஅளவிடவும்,தரத்தினைமதிப்பிடவும்,அளவுகளைச் சரிபார்க்கவும் நுட்பமானகருவிகளும், இயந்திரங்களும் புழக்கத்திற்குகொண்டுவரப்பட்டபின்னர் பாரம்பரியகைவினைஉற்பத்தியாளர்களிடம் இருந்த இத்தகையஅனுபவத் தேர்ச்சியும்,திறனும்,அறிவும் தேவையற்றுப் போனது.

இறக்குமதிக் கொள்கைகள் மூலம் தமதுபொருள்களுக்கானசந்தைகளாகபல்தேசியக் கம்பனிகள் உருவாக்கப்பட்டன. இவற்றின் பிரமாண்டமானகாட்சியறைகளுக்கும்,கவர்ச்சிகரமானஉற்பத்திகளுக்கும் மத்தியில் மரபுவழிபொருள்கள் ஓரங்கட்டப்பட்டன. இயற்கைச் சாயவேர்களுக்குப் பதிலாக இரசாயணங்கள் கொண்டுஉருவாக்கப்பட்ட நூல் வகைகள்,மேலைநாட்டுப் பிரம்புகள்,பிளாஸ்டிக் பொருள்கள்,ஆகியனசந்தைகளில் கிடைத்தன. விற்பனைச் சந்தைகளில் சுதேசஉற்பத்திகள் 'உள்ளூர் பொருள்கள்'(Local products) என்றும்,வெளிநாட்டுப் பொருள்கள் 'இறக்குமதிப் பொருள்கள்'(Imported Items) என்றும் முத்திரைகுத்தப்பட்டன. இங்கேலோக்கல் என்பது'தரமற்றது'எனும் சிந்தனையும் உள்ளூர் மக்கள் மனங்களில் பதிந்துபோனது. இதனால் இத்தகையபொருள்களின் நுகர்வுத் தன்மையும் மந்தகதியானது. இதன் விளைவுகளால் மரபுவழியானஉற்பத்திப் பொருள்கள் மெல்லமெல்லவிலக்கப்பட்டன. அந்த இடங்களைகாலனியநாடுகளின் இறக்குமதிப் பொருள்கள் ஆக்கிரமித்துக் கொண்டன. அதனால் காலனியர்களின் விஞ்ஞானரீதியானபொருள் உற்பத்திகள்,பன்னாட்டுநிறுவனங்கள் என்பனசுதேசமரபு வழி

உற்பத்திகள் மீதுதாக்கம் செலுத்தின. இதனால் உள்நாட்டுமக்கள் தமதுவாழ்வியலுக்குதேவையானவற்றைத் தாமேஉற்பத்திசெய்துகொள்ளும் அறிவினையும்,உற்பத்திமுறைகளையும் இழக்கும் நிலைஉருவாகியது. பண்பாடடுப்,பாரம்பரியங்களைஅடுத்ததலைமுறைகளுக்குகொண்டுசெல்வதுமுடியாமல் போனது. மரபுவழிஉற்பத்திகளின் பொருள் ஆக்கஅறிவை இழந்துவரும் சமூகம்,மெல்லமெல்லநுகர்வுக் கலாச்சாரத்திற்குத் தள்ளப்படுகின்றது. நுகர்வுக் கலாச்சாரம் என்பதுஉடனடி இலாபத்தைநோக்கமாகக் கொண்டுஉருவாக்கப்படுவதாகும். எனவேநீண்டகாலத்திற்குசிந்திப்பதும்,நீண்டகாலபண்பாட்டிற்குபொருள் உற்பத்திசெய்வதும்,அடுத்ததலைமுறைபற்றிசிந்திப்பதும் அர்த்தமற்றதாக்கப்பட்டது.

இன்றுபயன்படுத்திவிட்டுத் தூக்கிப் போடுதல் (Use & Throw) எனும் ஒருமதிப்பீட்டுடன் பொருள்கள் உற்பத்திசெய்யப்படுகிறன. இது நவீனஉற்பத்திகளுக்கும்,நவீனஉற்பத்தியாளர்களுக்கும் அதிகளவுநன்மையையும்,விற்பனையையும் ஏற்படுத்துகின்றது. அடுத்ததலைமுறைகள் பயன்படுத்துவதற்கானஉற்பத்திகளைமேற்கொள்ளயாரும் ஆர்வம் காட்டுவதில்லை. இதன் விளைவாகப் பலஆண்டுகளாகப் பயன்படுத்தியபொருள்கள் அவற்றின் பாவனையையும்,உறுதிப்பாட்மையும்,தரத்தையும் கடந்துகவர்ச்சியற்றவையாகிவீடுகளின் பரன்களுக்கும்,களஞ்சியஅறைகளுக்கும்,அரும்பொருள் காட்சிக்கூடங்களுக்கும் இடம் மாற்றப்படுகின்றன.

முடிவாக இயந்திரப் பாவனைகளின் அறிமுகம், உள்ளூர் உற்பத்திகளுக்குசர்வதேசசந்தைகளில் இடம் கிடைத்தமை,ஏற்றுமதித்துறைசார் வருமானம் அதிகரித்தமை,நவீனதொழில் நுட்பங்கள் புகுத்தப்பட்டமை,புதிய மூலப் பொருள்கள் கிடைக்கப்பட்டமை,தொழில் பயிற்சிநிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டமைபோன்றசாதகமானமாற்றங்கள் கைவினைசார் உற்பத்தித் துறையில் ஏற்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கன.

அதேவேளைசுதேசகைப்பணிஅடையாளங்கள் சிதைக்கப்பட்டமை. இயந்திரக் கலாசாரத்தால் கைத்திறனுக்குரியஆற்றல்கள் மழுங்கடிக்கப்பட்டமை. புதிய மூலப் பொருள்களின் இறக்குமதியாலும்,பிரயோகத்தாலும் சூழல் நட்புறவாகஉருவாக்கப்பட்டகைவினைப் பொருள்களின் உற்பத்தியில் தாக்கம் ஏற்பட்டமை,உற்பத்திகளுடன் தொடர்புபட்டிருந்தசமூகங்களின் நம்பிக்கைகளும்,ஐதீகங்களும் கேள்விக்குறயானமை,உற்பத்தியாளனுக்கும் உற்பத்திப் பொருள்களுக்கும் இடையிலான இடைவெளிஅதிகரித்தமை. மக்களின் நவீன இரசனைகளுடன் பாரம்பரியஉற்பத்திகள் போட்டிபோடவேண்டிய சுழல் உருவானமை. விற்பனையைமேம்படுத்தும் நோக்குடன் குறுகியகாலத்திற்குள் புதிதுபுனையும் தன்மைகளுடன் உற்பத்திசெய்யப்படும் நவீனபொருள்களுக்குமத்தியில்,நீண்டகாலப் பாவனையைக் கருத்தில் கொண்டு,காலநீடிப்பிற்கும் நின்றுழைக்கும் நோக்கோடுஉற்பத்திசெய்யப்பட்டபாரம்பரியபொருள்களுக்குப் பழமையானவைஎனும் முத்திரைகுத்தப்பட்டமைபோன்றனவிடயங்கள் காலனியக் கருத்தாக்கங்களின் விளைவால் மட்டக்களப்பின் பாரம்பரியகைவினைமரபுகளில் ஏற்பட்டபாதகமானதாக்கங்களாக இன்றுவரைகாணப்படுவதைஅறியமுடிந்துள்ளது.

மட்டக்களப்பின் பாரம்பரியக் கைவினைமரபுகளைமீட்டெடுப்பதற்கானமுன்வைப்புக்கள்.

உயிரினங்கள் காலப்போக்கில் தங்கள் சூழலுக்குத் தக்கவாறுபடிப்படியாகமாற்றம் அடைகின்றன. இதில் சூழலுக்குத் தகுந்தபண்புகளைகொண்டஉயிரினங்கள் உயிர் வாழந்து, இனப்பெருக்கம் செய்து,அந்தபண்புகளைஅடுத்ததலைமுறைக்குகடத்துகின்றன. மற்றவைஅழிந்துபோகின்றன. இது தகுதிஉள்ளவைதப்பிபிழைக்கும் (Survival of the fittest) எனும் சான்ஸ் டாவினின் (Charles Darwin) இயற்கைதேர்வுகோட்பாடு (Evolution, & Natural Selection).

இக்கோட்பாட்டினைமட்டக்களப்பின் கைவினைப் பாரம்பரியத்துடனும் பொருத்திப் பார்க்கமுடிகிறது. காலத்திற்குக் காலம் ஏற்பட்டஅரசியல்,பண்பாட்டுமாற்றங்களுக்கும்,விற்பனைச் சந்தைப் போட்டிகளுக்கும்,நவீனஉற்பத்திப் பொருள்களின் சமகாலப் போக்குகளுக்கும் (Trand),மக்களின் மாறிவரும் இரசனைகளுக்கும் தம்மைத் தகவமைத்துக் கொண்டபாரம்பரியக் கைவினைகள் தப்பிப் பிழைத்துள்ளன. இவற்றைமீள் உற்பத்திசெய்து,அவற்றின் பண்புகளைப் பாதுகாத்து,அவற்றைஅடுத்ததலைமுறைக்குகையளிப்புச்

செய்யவேண்டும். பாரம்பரியக் கைவினைப் பொருள்களின் அதுசார்ந்தஉற்பத்திச் சமூகத்தின் அனுபவஅறிவு,பயிற்சிகள்,மரபுகள்,நம்பிக்கைகள் போன்றபெறுமதிமிக்கசமூகக் கூறுகளால் உருவாக்கம் செய்யப்படுபவை.

இப்பாரம்பரியங்கள் அழிந்துவிடாமல் பேணிக் கொண்டே,அவற்றைசமகாலமக்களின் தேவைகள்,நவீனசந்தைவாய்ப்புகள்,அடுத்ததலைமுறையினரின் இரனைகள் என்பனவற்றிற்குஏற்றதுபோல் மாற்றிஅமைத்துக் கொள்ளவேண்டியதுகாலத்தின் தேவையாகும். கைவினைகளில் நவீனஉத்திகளை இணைப்பதுஅவற்றின் நிலைத் தன்மையையும்,சந்தைப் பொருளாதாரத்தையும் உயர்த்துவதோடுதலைமுறைகள் கடந்துபண்பாட்டையும்,பாரம்பரியங்களையும் கையளிப்புச் செய்யும் செயற்பாட்டிற்கும் துணைநிற்கும்.

இன்றுசமூகத்தின் அனைத்துத் துறைகளும் மாற்றங்களுக்குமுகம் கொடுத்துவருகின்றன. கைமருந்துகளுக்குள் கட்டுப்பட்டிருந்தபாரம்பரியமருத்துவத்துறை,கைமருந்திற்காகப் பயன்படுத்தப்பட்ட இஞ்சி,மஞ்சள்,திப்பிலி,சுக்குபோன்றவற்றிலிருந்தமருத்துவகுணங்களைக் கண்டறிந்து,அவற்றைமாத்திரைகளாகத் தயாரிக்கத் தொடங்கிவிட்டன

நாட்டுப்புற இசையிலேயேமக்களின் உயிர்ப்பு இருப்பதாகப் பாதுகாத்த இசைத்துறை இன்று,பாரம்பரிய இந்திய இராகங்களை ஹார்மனி (Harmony) ஜாஸ் (Jazz) தாளங்களுடன் இணைத்துக் கொண்டுள்ளது. இசைத்துறையில் இ.எம்.எஸ். குமார்,கர்நாடக இசையில் மின்னணுஒலித்தொகுப்பியைப் (Electronic Synthesizer)பயன்படுத்தினார். (மின்னணு மூலம் புதியஒலிகளைஉருவாக்கி,அவற்றைவடிகட்டி,மாற்றியமைத்துப் புதியஒலிகளைஉருவாக்குவது) ஏ.ஆர்.இராஜன் பாரம்பரியகருவிகளுடன் மேற்கத்தேயபாப் (Pop) தாளங்களைக் கலந்துபுதியஒலியைஉருவாக்கினார். இன்றுதாளத்துடன் கூடியபேச்சாகக் கொள்ளப்பட்ட இசையினை (Rapping) இணைத்துக் கொண்டு ஹிப்-ஹாப்(Hip-Hop) பாடல்கள் திரைத்துறையைஆக்கிரமித்துஉள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மரபுகளுக்குள் நின்றுகொண்டுஎழுதப்பட்டகவிதைகளில் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்,நவீனத்துவசெயற்பாடுகளால் பாரியமாற்றங்கள் ஏற்பட்டன. இது பாரம்பரியகவிதைவடிவங்களையும்,மொழியையும் மாற்றியது. சீர் கொண்டசெய்யுள் வரிகள்,வரிசையற்றஉடைந்தவரிகளாக்கப்பட்டன. அன்றாடவாழ்க்கையைப் பேசியகவிதைகள் அறிவியல்,தொழில்நுட்பம் வரைபேசின. நவீனகவிதைகளின் கருப்பொருள்கள் சமகாலஅரசியல்,பொருளாதாரம் ஆகியவற்றைவிமர்சித்தன. நாலடி,எட்டடிகளில் எழுதப்பட்டமரபுக் கவிதைகள் ஹைக்கூக்களாகவும்,மைக்ரோகவிதைகளாகவும் வடிவ மாற்றம் கண்டன. இவ்வாறுமரபுகளுக்குள் நின்றுகொண்டுபுதுமையைஏற்றுக் கொண்டதுறைகள் இன்னும் ஏராளம் இருக்கின்றன

இதேவேளைமரபுகளுக்குள் மட்டும் நிற்கும் கர்நாடக இசை, இளைய தலைமுறையினரிடம் சென்றடையாமல் போனது. பழையமெலடிமெட்டுக்களைமட்டுமேநம்பியபாடலாசிரியர்கள் திரைத்துறையிலிருந்துகாணாமல் போயினர். சமகாலத்தில் பரதநடனத்தால் பார்வையாளர் ஆர்வத்தைப் பூர்த்திசெய்யமுடியாமல் போனது. செய்யுள்,விருத்தம் மட்டுமேஎழுதிக் கொண்டுஉரைநடை,நாலல் போன்றநவீனபண்புகளைஏற்காததால் பலஎழுத்தாளர்கள் வாசகர்களை இழந்துள்ளனர். இவர்கள் மரபுகளைமதித்துக் கொண்டேபுதியமாற்றங்களைஏற்றுக் கொண்டிருந்தால் இத்தகையதோல்விகளைத் தவிர்த்திருக்கலாம்.

இந்தவகையில் மட்டக்களப்பின் கைவினைப் பாரம்பரியமானதுபெறுமதியானபலவிடயங்களைத் தன்னகத்தேகொண்டுள்ளது. இப் பொருள்கள் உருவாக்கப்பட்ட மூலப் பொருள்கள்,மனிதனுக்கும்,அவன் வாழும் சுற்றுச் சூழலுக்கும் ஆரோக்கியமானவை. இயற்கையானதும்,ஆரோக்கியமானதுமானநிலங்களில் விளைந்தவை. ஆனால் இவைஅரசாங்கத்தின் துரிதஅபிவிருத்தித் திட்டங்களாலும்,அதிகரித்துவரும் சனத்தொகைப் பெருக்கத்தாலும்,மக்களின் நவீனவாழ்க்கைமுறைகளாலும் மிகவும் அருகிவருகின்றது. இவற்றின் உருவாக்கத்தின் போதும்,பாவனையின் போதும் மக்களுக்குக் கிடைத்தஆரோக்கியமானவாழ்க்கைச்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

சூழல் மாறிப்போனது. சிறந்தஉடற்பயிற்சிகளாகவும்,கைகளுக்கும்,விரல்களுக்குமானபிரத்தியேகமானநரம்புபயிறிகளாகவும் (படம்-165),நரம்புமண்டலத்தின் சிறந்தசெயற்பாட்டையும் விருத்திசெய்தபாரம்பரியஉருவாக்கல் நுட்பங்களை இயந்திரங்கள் இல்லாமல் ஆக்கிவிட்டன. பாரம்பரிய இயந்திரநுழைவின் பின்னர் கைவினைகளைக் கட்டமைத்தபாரம்பரியஅறிவும்,அனுபவங்களும் வழக்கொழிந்துபோயின. இவைஅனைத்தும் மீட்டெடுக்கப்படவேண்டியவை.

இதற்காகமீண்டும் பாரம்பரியவாழ்க்கைமுறைகளுக்குள் நாம் நுழைந்துவிடமுடியாது. ஆதலால் நவீனவாழ்க்கைமுறைகளுக்குஏற்றதுபோலக் கைவினைமரபுகளைமாற்றியமைக்கவேண்டும். பேண்தகுஅபிவிருத்திக்கான (Sustainable Development) சிந்தனைகளுக்குள் நின்றுபாரம்பரியம் மாறாதவகையில் கைவினைஉற்பத்திகளில் நவீனஉத்திகளை இணைத்துக் கொள்வதற்கானமுயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பாரம்பரியக் கைவினைகளுக்குள் கட்டமைக்கப்பட்டிருக்கும் நன்மைகள் அடுத்ததலைமுறையினருக்கும் கிடைக்கவேண்டுமானால்,அவற்றின் நன்மைகள் சிதைக்கப்படாமல் அவைநவீனசெய்முறைகளைத் தனக்குள் உள்வாங்கிக் கொள்ளவேண்டும். இதனால் பயன்பாட்டுப் பெறுமானங்களைமட்டும் கருத்தில் கொள்ளாமல் அடுத்ததலைமுறையினரின் இரசனையோடு இணைந்ததேவைகளையும் நிறைவுசெய்யக்கூடியவகையில் மரபுவழிக் கைவினைகள் மாற்றம் காணவேண்டும்.

கைவினைஉற்பத்தியில் பிரதான சூத்திரதாரியாக இருப்பவர் கைவினையாளர். இன்றுகைவினைஞர்கள் தமதுபாரம்பரியதொழிலைக் கைவிட்டுஅரசதொழில்களின் மீதுநாட்டம் கொள்கின்றனர். இதற்குக் கைவினைப் பொருள்கள் நமதுபாரம்பரியத்தில் இருந்தும்,பயன்பாட்டில் இருந்தும் விலகிப் போனமைபிரதானகாரணமாய் அமைகின்றது.

தேசத்தின் அடையாளமானதுகைவினைகளுடனும்,கைவினைஞர்களுடனும் சம்பந்தப்பட்டதால், உள்ளூர் உற்பத்தியாளர்கள் நவீனதொழில்நுட்பஅறிவுபெற்றிருத்தல் அவசியம். இத்தகையபயிற்சிகளைவழங்குவதற்காகத் தொழில் நுட்பநிறுவனங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். அவைநவீனதொழில்டநுட்பத்தில் தேர்ச்சியுடையபலவளவாளர்களையும்,நவீனகருவிகளையும் கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொருகைவினைஉற்பத்திகளிலும் முன்னணியியில் இருக்கும் நாடுகளிலிருந்துவளவாளர்கள் கொண்டுவரப்பட்டுஅச்சிறப்புத் தொழில்நுட்பங்கள் தொடர்பானபயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

சர்வதேசநாடுகளைப் பொறுத்தவரைநெசவுத்துறையில் இந்தியா,சீனா, ஜப்பான்,துருக்கிபோன்றநாடுகளும்,மட்பாண்டத் தொழிலில் சீனா, ஜப்பான்,துருக்கி,மரவேலைகளில் சீனா, இத்தாலி, இந்தியாபோன்றனவும்,பனம் பொருள் உற்பத்திக்குகேரளா,தமிழ் நாடுஎன்பனவும்,பிரம்புவேலைகளுக்காக இந்தோனேசியா,சீனா,மெக்சிக்கோபோன்றநாடுகளும் பிரசித்திபெற்றிருப்பதுகுறிப்பிடத்தக்கது. இவற்றிலிருந்துவளவாளர்களை இணைத்துக் கொள்வதன் மூலம் அந்நாடுகளில் பயன்படுத்தப்படும் புதியதொழில் நுட்பங்களையும்,வடிவமைப்புமாதிரிகளையும் சுதேசகைவினையாளர்கள் பயின்றுகொள்ளமுடியும்.

கைத்தொழில் துறையைப் பொறுத்தவரைமேலேஎடுத்துக் காட்டபபட்டுள்ளநாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்படவேண்டுமானால், இலங்கையின் சுற்றுலாத்துறைக் கையேடுகளிலும்,சுற்றுலாவழிகாட்டிகளிடமும்,வலைத்தளங்களிலும் மட்டக்களப்பின் கைவினைத்துறைபற்றியதகவல்கள் இற்றைப்படுத்தப்பட (Update)வேண்டும். ஏனைய நாடுகளின் சுற்றுலாமுகவர்களிடமும் இவை தெளிவுபடுத்தப்படுவது இலங்கை,மட்டக்களப்புநோக்கியசுற்றுலாத்துறையினரின் வருகையைஅதிகப்படுத்தவழியமைக்கும்.

யாழ்ப்பாணத்தில் கோப்பாயிலும்,கொழும்பில் மருதானையிலும் அமைக்கப்பட்டதொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றுகைவினைகளைவலுப்படுத்தக்கூடியதொழில்நுட்பக் கல்லூரி ஒன்றுமட்டக்களப்பிலும் அமைக்கப்படுதல்

வேண்டும். 1985 ஆம் ஆண்டு இலங்கைஅரசினால் கொண்டுவரப்பட்டசட்டத்தின் பிரகாரம்,தேசியகைவினைகள் சபையும் அதனுடன் தொடர்புடையநிறுவனங்களான இலங்கைகைப்பணிகள், சபை மற்றும் தேசியவடிவமைப்புமையம் என்பனஉருவாக்கப்பட்டபோதிலும் அவைசிங்களமக்களின் கைவினைப் பாரம்பரியங்களையேதேசத்தின் அடையாளமாகக் காட்சிப்படுத்துவதுடன் அவற்றின் பெரும்பாலானவேலைத் திட்டங்கள் சிங்களக் கைவினைஞர்களைமையப்படுத்தியதாகவேஅமைந்துள்ளன. மட்டக்களப்புக் கைவினைஞர்களின் கைவினைகளைவிற்பனைசெய்வதற்குலக்சலபோன்றஅரசநிறுவனங்களின் ஆதரவுஅதிகரிக்கப்படவேண்டும். மட்டக்களப்பைப் பொறுத்தவரைசிலகைப்பணிப் பொருள்களைமட்டும் ஒன்றாகவைத்துவிற்பனைசெய்யப்படும் சிறுகடைகள் மட்டுமேகாணப்படுகின்றன. உற்பத்திசெய்யப்படும் அனைத்துக் கைப்பணிப் பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதானபெரியளவிலானஅங்காடிகள் உருவாக்கப்படவேண்டும். இதுபிரதேசமக்களிடம் கூட பாரம்பரியகைப்பணிப் பொருள்கள் மீதானநுகர்விற்கானதூண்டுதலைஅதிகரிக்கக் கூடியதாகஅமையும். அதிகநுகர்வுஉற்பத்தியாளர்களின் உழைப்பிற்குக் கைகொடுக்கும்.

இவற்றுடன் கைவினையாளருக்குத் தமக்குத் தேவையானஅலங்காரங்களையும்,வடிவங்களையும் கணினியில் வடிவமைத்துத் தமதுஉற்பத்திகளில் அவற்றைப் பயன்படுத்துவதற்கும்,பாரம்பரியஅலங்காலங்காரவடிவங்களை,நவீனவடிவங்களுடன் இணைத்துப் புதியவடிவங்களைப் புனைந்துகொள்வதற்கும்,பாரம்பரியஅலங்காரங்களைகணினிகளில் முறையாகச் சேமித்துக் கொள்வதற்கும் பொருத்தமானபயிற்சிகளைவழங்குவானுடாகபாரம்பரியங்களைப் பேணிக் கொண்டுநவீனஉத்திகளைப் பயன்படுத்தக் கூடியஅறிவு,திறன்,தேர்ச்சிஎன்பவற்றைவழங்குவதற்கானபயிற்சித் திட்டங்கள் அமுலாக்கப்படவேண்டும்.

கைவினைஉற்பத்தியாளரிடையேஏற்படுத்தவேண்டியமாற்றங்கள் போலவேகைவினைஉற்பத்திகளிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படல் வேண்டும். 'எல்லாநாட்டுமக்களும் தங்கள் முன்னோர்கள் விட்டுச் சென்றகலைச் செல்வத்தின் சிறந்த இயல்புகளைஆர்வத்துடன் கற்றுப் போற்றிவளர்த்தல் வேண்டும். முற்போக்குடையமேலைத்தேயமக்கள் தங்கள் பண்டையகலைப் பொருள்களையும்,கலாநிலையங்களையும் போற்றிவாழ்வதைநாம் அறிவோம். பண்டையபெருளினைப் போற்றிவாழும் மனப்பான்மைஆங்கிலமக்களிடத்தேகாணப்படும் சிறந்தகுணப்பண்பாகும். அவர்களிடத்தே இப்பண்புசிறந்துவிளங்குவதற்குக் காரணம் அவர்கள் சிறுபராயம்தொட்டேநாட்டின் சரித்திரத்தைமுழுமையாகக் கற்றுவருவதாகும்'(நவரெத்தினம்.1954.51)எனும் கூற்றுக்குஅமையஒவ்வொருசமூகமும் தமதுபாரம்பரியம் பற்றியும்,பாரம்பரியத்தின் குறியீடுகளாகஅமையும் பொருள்கள் பற்றியும்,அவைதமதுபண்பாட்டின்,முன்னோர்களின் பெறுமதிமிக்கஅடையாளங்கள் என்பதுதொடர்பாகவும் சிறுவயதுமுதலேஅறிந்துவைத்திருக்கவாய்ப்பளிக்கவேண்டும். சமூகத்தில் கைவினைகளும்,கைவினையாளர்களும் போஷிக்கப்படவேண்டுமாயின் அவைபாடசாலைகளிலும்,பாடப்புத்தகங்களிலும் இருந்தேஆரம்பிக்கப்படவேண்டும். பாடசாலைகளின் கல்விச் சுற்றுலாக்களின் போதுஉற்பத்திச்சாலைகள் (Factories)பார்வையிடப்படுவதுபோலபாரம்பரியகைவினைப் பொருள்கள் உற்பத்திசெய்யப்படும் இடங்களும் பார்வையிடப்படுவதற்குபாடசாலைகள் வழிப்படுத்தப்படுதல் வேண்டும். இந் நடவடிக்கையினால் படித்தமக்களின் கௌரவத்தினையும்,பாராட்டுக்களையும் பாரம்பரியக் கைவினைஞர்கள் பெறுவதற்கும் வழியமைக்கமுடியும். இதன் மூலம் பாடசாலைப் பருவத்திருந்தேகைவினைகள் தொடர்பானஆர்வத்தையும்,அறிவையும் மாணவர்களிடம் ஏற்படுத்தமுடியும்.

நெசவுக் கைவினைதொடர்பாகநோக்கும்போது நூலுக்குக் சயாயம் இடுவதில் இன்னும் முன்னேற்றங்கள் ஏற்படவேண்டும்.இருக்கின்றன. வர்ணங்கள் வரையறுக்கப்பட்டவையாகவும்,ஐரோப்பாவில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. அவைஐரோப்பியரின் சுபாவத்துக்கும் தட்பவெப்பநிலைகளுக்குபொருத்தமானவையாகவேஉள்ளன. இதனால் இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் அநேகபுடவைகள் ஐரோப்பாவில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்டவைபோலவேதோற்றமளிக்கின்றன. இதனால் இலங்கைக் கைத்தறிஉற்பத்திகளின் தனித்துவம் பாதிக்கப்படுகின்றது.

இலங்கைக்கேயானவர்ணங்களைஉற்பத்திசெய்வதற்குஆராய்ச்சிகளைமேற்கொள்ளுதல் அவசியம். இலங்கையில் மரபுவழியாகச் சாயங்களைத் தயாரிப்பதற்காகத் தாவரச் சாறுகள் உபயோகிக்கப்பட்டுவந்துள்ளன. எனவே இந்த இயற்கைச் சாயங்களைமீண்டும் உபயோகித்தல் பொருத்தமானஒன்று.

இன்று இயற்கைச் சாயமிடப்பட்டதுணிகளுக்குஉள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகுந்தகிராக்கிநிலவுகின்றது. நவீனகருவிகள் புழக்கத்திற்குவராதஆரம்பகாலங்களிலேயேயாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் உள்ளசாயதாவரங்கள் இனங்காணப்பட்டுசாயங்கள் பெறப்பட்டுள்ளன. இன்று இச்செயற்பாடுகள் நவீன இயந்திரங்களுடன் இணைக்கப்படும் போதுஅதன் மூலம் விரைவாகவும்,அதிகபயனையும் பெறக் கூடியதாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தவகையில் இயற்கைச் சாயங்களைப் பெருமளவில் பெற்றுக் கொள்ள இந்தியாபோன்றநாடுகளில் பயன்படுத்தப்படும் Rotary Extractor (உலைக்கலன்) Filter Press (திரவத்திலிருந்துசாயத்தைப் பிரித்தெடுத்தல்), Rotary Evaporator (செறிவாக்கி, Hot air Diyer(சாயத்தைஉலர்த்துவதற்கு) போன்ற இயந்திரத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் போதுஅதிகளவு இயற்கைச் சாயங்களைப் பெறமுடியும். மண் வளம் நிரம்பியமட்டக்களப்புப் பிரதேசத்தில் இயற்கைச் சாயத்தைப் பெறக் கூடியதாவரங்கள் செழிப்பாகவேவளர்ந்துள்ளன. அவை இனங்காணப்பட்டுவளர்க்கப்படவேண்டும். இதன் மூலம் வேலைவாய்ப்புகளைக் கூட உருவாக்கமுடியும்.

ஒவ்வொருசாயநூலுக்கும் சாயத்தின் வகை,மேற்கொள்ளப்பட்டசாயத் தயாரிப்புமுறை,பரிட்சிக்கப்பட்டுவெயிலைதாங்கும் சக்திஆகியவற்றிற்குச் சான்றுபகரும் ஒருபரிசீலனைச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும். இதுநெசவாளரும்,உபயோகிப்பாளரும் சாயத்தின் தராதரங்களைஅறிந்துகொள்ளஉதவும். இத்தரவுகள் உற்பத்திகளில் இணைக்கப்படும் போதுஅதுஉற்பத்திப் பொருள்கள் மீதானநம்பிக்கையைஅதிகரிக்கச் செய்யும். இதுநுகர்வின் அதிகரிப்பிற்குக் கூட வழியமைக்கலாம். ஒருஅழகான புடவை ஒருகுறுகியகாலத்தில் தனதுவர்ணத்தை இழந்துவிடுவதாக இருந்தால் அதனைகைத்தறியினால் நெசவுசெய்வதில் பயனில்லாமல் போய்விடும்.

நெசவுப் பொருள்களின் உற்பத்தியில் பொதுவாகஒருமுகப்பாடுகாணப்படவில்லை. எனவேபொருத்தமானஒருங்கிணைப்பைவழங்கக்கூடியவகையில் மேசைவிரிப்புகள்,மேசைப் பாய்கள், கை துடைக்கும் துண்டுகள்,படுக்கைவிரிப்புகள்,கதிரைச் சிலைகள்,குஷன் மேலுறைகள்,கதவு,யன்னல் திரைச்சீலைகள்,அலங்காரப் பொருள்கள் முதலியவற்றைநெசவுத் தொழிற்சாலையிலேயேஒன்றாகத் தயாரிக்கப்பட்டுப் ஒருதொகுதியாகப் பொதிசெய்யப்பட்டுவிற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்படும் போதுஅதுநுகர்வோரைக் கவரவும் நுகர்வினை இலகுபடுத்தித் துரிதப்படுத்தவும் வழிகோலும். இன்று இலங்கையின் பிரமாண்டமானசுற்றலாவிடுதிகளில் இத்தகையதயாரிப்புகள் பயன்படுகின்றபோதும் அவை இந்தியா, ஜப்பான்,சீனாபோன்றநாடுகளிலிருந்தே இறக்குமதிசெய்யப்படுகின்றனவாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இங்குபொதிசெய்யப்பட்டமேசைப் பாய்கள், கை துடைக்கும் துண்டுகளுடன் அதேசாயல்,நிறஒருமைப்பாடுகொண்டவேலைப்பாடுகளுடன் கூடியபிரம்பிலானஅல்லதுகொம்பில் செய்யப்பட்ட கை துடைக்கும் துண்டுவைக்கும் ஏந்தனங்களையும்,மேசைச் சீலைத் தொகுதிக்குப் பொருத்தமானவண்ணங்களால் பன் அல்லதுபனையோலைகொண்டுஉருவாக்கப்பட்டநீர்க்குவளைகளுக்கான மூடிகளையும் உருவாக்கிக் கொள்ளலாம். உணவுமேசைக்குப் பொருத்தமானஉப்பு,மிளகுதூள் சாடிகளைகளிமண்ணால் உருவாக்கி,மேற்படிதொகுதிக்கேற்றதுணிகளினால் அலங்காரங்களைஉருவாக்கலாம். இதுஉணவுமேசைக்கானவெவ்வேறு மூலப்பொருள்களைக் கொண்டகைவினைப் பொருள்களின் தொகுதியொன்றினைக் கொண்டதாகஅமையும். அத்துடன் வெவ்வேறு மூலப் பொருள்களைக் கொண்டுஉற்பத்திகளைஉருவாக்கும் கைவினைஞர்களிடையேதொடர்பையும், கூட்டுமுயற்சியையும் ஏற்படுத்துவதாக இது அமையும்.

மரவேலையை பொறுத்தவரை ஆரம்பகாலத்தில் மட்டக்களப்பில் சிறப்புற்றிருந்தகருங்காலி, புளி, முதிரை,

பாலை, தேக்கு, பலா, மலைவேம்பு, தென்னை, மகோகனி, இலுப்பை, மண்டு, சவுக்கு, நெடுங்கு, றாணை, பனை போன்றசிறந்தமரங்கள் மரவேலைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளன. தேக்கு, கருங்காலி போன்றமரங்களின் உறுதிப்பாடும், ஹால்மில்லா, மில்லா போன்றன அலங்கார வேலைகளுக்கும் சிறப்புப் பெற்றிருந்ததும் மட்டக்களப்பிலிருந்துபெருமளவிற்குமரங்கள் ஏற்றுமதிசெய்யப்படக் காரணமாயிருந்தது. காலப்போக்கில் அம்மரங்களைப் பெறுவதிலுள்ளசிக்கல்கள்,அரசகட்டுப்பாடுகள் காரணமாகமட்டக்களப்பிலும் மரங்களை இறக்குமதிசெய்யவேண்டியநிலைஏற்பட்டது.

இதனால் பர்மாவிலிருந்துதேக்குமரங்கள் கூட இறக்குமதிசெய்யப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. அதுமட்டுமில்லாமல் இன்றுபெருமளவில் மரப் பொருள்களைஉருவாக்கப் பயன்படும் ஒட்டுமரப்பலகைகள் (Plywood) கூட இறக்குமதிசெய்யப்படுவதைக் காணலாம். ஜின்தோட்டையில் உள்ளஒட்டுப்பலகைத் தொழிற்சாலை மூலம் உற்பத்திசெய்யப்படும் ஒட்டுப்பலகைகள் அரசாங்கத்தின் தேவைகளைநிறைவுசெய்வதற்கேபோதுமாகதாகக் காணப்படுகின்றன. இதனால் காட்டுவளங்களும்,மரச்செறிவும் நிறைந்தமட்டக்களப்பில் ஒட்டுப்பலகைத் தொழிற்சாலைஒன்றினைஉருவாக்கமுடியும். மரவேலைகளுடன் இணைத்துஒட்டுப்பலகைகொண்டுஉருவாக்கக் கூடியகைவினைகளையும் அதன் மூலம் விருத்திசெய்யமுடியும்.

ஹோட்டல்கள்,உணவுச்சாலைகள்,உணவுவிநியோகிக்கும் தாபனங்கள் ஆகியவற்றிற்காகஉருவாக்கப்படும் தளபாடங்கள் மிகவும் முக்கியமானவை. இவற்றிற்குப் பொருத்தமாகமடித்துவைக்கக்கூடியமேசைகள்,கதிரைகள்,தளபாடங்கள் என்பனஉருவாக்கப்படல் வேண்டும். சமகாலத்தில் மரத்தளபாடங்களைமக்கள் பாவனைக்குப் பெரிதும் விரும்பாமைக்குப் பிரதானகாரணம் அவைஅதிகனம் கொண்டவையாகஅமைவதும், இதனால் தூக்கிநகர்த்தமுடியாமல் இருப்பதும் ஆகும். மரத்தளபாடங்கள், இடப்படுத்தும் போதுஅதிக இடப்பரப்பைப் பிடித்துக் கொள்வதுபிறிதொருகாரணமாகும். இதனால் பாரங்கூடியதாகஉருவாக்கப்படும் மரஅலுமாரிகள்,சோபாக்கள்,காட்சிப்பெட்டிகள் (Showcase) என்பவைஉருவாக்கப்படும் போதுஅவற்றினை இலகுவாகநகர்த்திக் கொள்வதற்காகத் தொழில் நுட்பத்துடன் இணைத்துஅவற்றின் அடியில் சக்கரங்களைப் பொருத்திக் கொள்ளமுடியும்.

மரப்பொருள்களைப் பொறுத்தவரைஅவற்றைப் பயன்படுத்தாதநேரங்களில் பெரும்பாலும் அவற்றினைப் பலகைகளாக கழற்றியேவைக்கவேண்டியுள்ளது. அதனைத் தவிர்த்துக் கொள்வதற்காகஅலுமாரிகளையும்,சோபாக்களையும் மடித்துவைக்கக் கூடியதாகஉருவாக்கிக் கொள்ளசிபாரிசுசெய்யப்படலாம். அத்துடன் வீட்டினுடையதரையில் பதிக்கப்பட்டமாபிள்களின் அலங்காரத்தைப் பொறுத்தவர்ணஅமைப்புக்களைமரப்பொருள்களின் மேற்பகுதிகளிலும் உருவாக்கிக் கொள்ளலாம். இதுவீட்டின் தரைக்கும்,பயன்படுத்தப்படும் மரப் பொருள்களுக்கும் மத்தியில் சிறந்த இடைத்தொடர்பைஉருவாக்கிச் சிறந்தகட்புலஅழகியலைத் தரும். மரப் பொருள்களின் பாரத்தைக் குறைப்பதற்காகசோபா,கதிரைகள் போன்றவற்றில் சாய்ந்திருக்கும் முதுகுப் பகுதியில் மரச்சட்டங்களுக்குப் பதிலாகப் பிரம்புகளைக் கொண்டுபின்னல் வேலைகளைச் செய்தும் அவற்றில் இணைக்கமுடியும்.

களிமண் பொருள்களைப் பொறுத்தவரைதானியங்கி சூளைகள் உருவாக்கப்படலாம். உள்ளேஅடுக்கப்படும் பாத்திரங்களின் எண்ணிக்கைக்குஏற்பபொருத்தமான சூட்டை உருவாக்கிபாத்திரங்கள் சேதமுறாமல் சுட்டெடுக்கக் கூடியமேம்பட்ட சூளைகள் உருவாக்கப்படவேண்டும். பாத்திரங்களின் எண்ணிக்கைக்குஏற்பதேவையானபோது சூளையின் வெப்பநிலையைஅதிகரிக்கவோ,குறைத்துக் கொள்ளவோ கூடியதாய் சூளைகள் உருவாக்கப்படல் வேண்டும். பாத்திரங்களின் முப்பரிமாணவடிவமைப்புக்களை (3D) கணினியில் வடிவமைக்கக் கூடியதானதொழில்நுட்பஅறிவுமட்பாண்டஉற்பத்தியாளர்களுக்குவழங்கப்படவேண்டும்.

சமையலறைக்கானமண்பாத்திரங்கள் உருவாக்கப்படும் போதுஅவற்றை இலகுவாகக் கையாளக் கூடியவாறுநவீனபாகங்களுடன் இணைக்கப்பட்டதாகவும் (படம்-172),வெளித்தெரியக் கூடிய மூடிகள்என்பனபோன்றவெவ்வேறுநவீன மூலப் பொருள்களை இணைத்துஉருவாக்கப்படலாம். இத்தகையமுயற்சிகள் இன்று இந்தியாபோன்றநாடுகளில் இன்றுமுன்னெடுக்கப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2026, IRJTSR

தும்புஉற்பத்திகளைநோக்கும் போது,தும்பைப் பயன்படுத்திதொடர்ச்சியாகப் பாய்களும்,நிலவிரிப்புகளும்,கால்தட்டிகளும் உற்பத்திசெய்யப்படுகின்றன. கைத்தும்புமிகவும் மென்மையாகக் காணப்படுவதால் அவற்றைப் பயன்படுத்திகுஷன்களுக்கானதிண்டுக்கள்,வாகனங்களின் இருக்கைகளுக்கானகுஷன்கள்,பாத்திரங்களைக் கழுவுவதற்கானவெவ்வேறுதடிப்புகளைக் கொண்டதேய்ப்பான்கள் உருவாக்கப்படலாம். சீனாமற்றும் தெக்கிழக்காசியநாடுகளில் (தாய்லாந்து,வியட்நாம்) பலதரப்பட்டசேமிப்புஅளவுகளில் தும்புதரவுக் குச்சிகள் (USB Drive) உருவாக்கப்படுகின்றன, இந்தப் பொருள்கள் மின்காப்புமற்றும் வெப்பஎதிர்ப்புப் பண்புகளைப் கொண்டிருப்பதால் நீண்டநாள் பயன்படுத்தமுடிவதாகinfo@jhd-meterial.com. தகவல் தருகின்றது. மட்டக்களப்பில் சர்வதேசஏற்றுமதித் தரத்தில் தும்புஉற்பத்திமேற்கொள்ளப்படுவதால், இத்தகையதொழில்நுட்பசாதனங்கள் உருவாக்கப்படுவதற்கானமுன்னெடுப்புக்களைமேற்கொள்ளமுடியும்.

இவற்றுடன் இன்றுவீடுகளின் தரைக்குமாபிள்களைக் பயன்படுத்துவற்குப் பதிலாகமாபிள்களின்வடிவில் தரைக்குஒட்டும்(Stickers) பயன்படுத்தப்படுகின்றன. இலங்கைபோன்றவெப்பவலயநாடுகளின் வீடுகளினதும்,வீட்டில் வசிப்பவர்களினதும் ஆரேக்கியமானவாழ்க்கைத் தரத்தைமேம்படுத்திக் கொள்வதற்காக இவ்வாறானதரைவிரிப்புகளின் நடுவேமெல்லியபடையாகத் தும்புப் பாய்களைபயன்படுத்தமுடியும். தென்னை வளம் நிறைந்தமட்டக்களப்புமாவட்டத்திலேதரமானதும்பினைக் குறைந்தசெலவிலேஉற்பத்திசெய்யமுடியும். எனவேஅவற்றைப் பொருத்தமானவகையில் நவீனதொழில் நுட்பத்துடன் பயன்படுத்தும் போது சூழல் நேயமானபலநன்மைகளைப் பெறமுடியும்.

முடிவாகஇலங்கையில் ஏற்பட்டகாலனியஆட்சியானது,சுதேசமக்களின் பண்பாடுகளில் ஏற்படுத்தியதாக்கங்கள் அவர்களின் கைவினைப் பாரம்பரியங்களிலும் செல்வாக்குச் செலுத்தியது. சுயதேவைப் பூர்த்தியுடன் தன்னிறைவாகஉற்பத்திசெய்யப்பட்டிருந்தனகைவினைப் படைப்புகள் அவற்றோடுஒவ்வொருபொருள்களின் உருவாக்கல் சார்ந்தநம்பிக்கைகள். மரபுகள் போன்றஅகக்காரணிகளையும் தமக்குள் இணைத்திருந்தன. உற்பத்திசார்ந்தஅனுபவஅறிவும், கூட்டுஉழைப்பும் அவற்றின் அடிப்படைகளாயிருந்தன. இயந்திரஅறிவும்,தொழிற் பயிற்சிகளும்,ஏற்றுமதிவாய்ப்புகளும்,பாடசாலைசார்ந்ததொழிற்கல்விவாய்ப்புகளும் காலனியம் மட்டக்களப்பின் கைவினைகள் சார்ந்துவழங்கியநன்மைகளாயிருந்தமைகுறிப்பிடத்தக்கன. ஆனால் காலனியக் கருத்தியலின் ஆதிக்கங்கள் இவற்றைக் கேள்விக்குறியாக்கின. இயந்திரஅறிவும்,தொழிற் பயிற்சிகளும்,ஏற்றுமதிவாய்ப்புகளும்,பாடசாலைசார்ந்ததொழிற்கல்விவாய்ப்புகளும் காலனியம் மட்டக்களப்பின் கைவினைகள் சார்ந்துவழங்கியநன்மைகளாயிருந்தமைமறுக்கமுடியாது. அதேவேளைவளச்சுரண்டல்களும்,மதச் செல்வாக்கும் அதனால் ஏற்பட்டஅழிவுகளும்,தலைமுறைகள் தாண்டியஅனுபவஅறிவும்,நுட்பங்களும், கூட்டுஉழைப்பின் பரிவர்த்தனைகளும்,தொழில் தேர்ச்சிகளும்,சமூகமாற்றங்களால் சிதைந்தஉற்பத்திப் பாரம்பரியங்களுடன் தொடர்புடையநம்பிக்கைகளும் மாற்றம் கண்டமைமட்டக்களப்பின் கைவினைப் பாரம்பரியத்தில் எதிர்மறையானதாக்கங்களைஏற்படுத்தியிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

காலனியகாலத்தில் சரிந்தசுதேசியகைவினைப் பாரம்பரியத்திற்கு,சுதந்திரத்திரத்திற்குப் பின்புதோன்றியபலதேசியக் கம்பனிகள் பலத்தசவாலாகஅமைந்தன. சமகாலத்திலும் தொடரும் இத்தகையசவால்களுக்குமுகம் கொடுத்துக்,காலமாற்றங்களுக்குள் தன்னைத் தகவமைத்துக் கொள்ளவேண்டுமானால் கைவினைகள் முழுக்கமுழுக்கபாரம்பரியம் சார்ந்ததாகஅல்லாமல் காலத் தேவைகளுக்குஏற்பதம்மைமாற்றிக் கொள்ளவேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. இதற்காகப் பாரம்பரியக் கைவினைகள் நவீனமாற்றங்களைஅவற்றின் உருவாக்கத்திலும் உற்பத்தியிலும் உள்வாங்கிக் கொள்வதுடன் பாரம்பரியமரபுகளையும் தக்கவைத்துக் கொள்ளவேண்டும்.

முடிவுரை

ஒருசமூகத்திலுள்ளவிடயங்களைதொட்டுணரக்கூடியவை (Tangible), தொட்டுணரமுடியாதவை(Intangible) எனவகைப்படுத்தலாம். கைவினைகள் இவை இரண்டிலும் உள்ளடங்கும். தொட்டுணரமுடியாதகைவினைசார் அனுபவம்,அறிவு,திறன் என்பவைஉற்பத்தியாகமாற்றப்படும் போதுஅதுதொட்டுணரக் கூடியபொருளாகின்றது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2026, IRJTSR

மட்டக்களப்புமாவட்டத்திற்குரியகைவினைப் பாரம்பரியம் சுதேசத் தன்மைகொண்டதனித்துவமானமரபாக இருந்துள்ளது. இதுபரம்பரையாகப் பார்த்தும்,கேட்டும் பெற்றபயிற்சிகளைத் தலைமுறைகளாகக் கையளிப்புச் செய்ததன் மூலம் பயிலப்பட்டுவந்தது.

இந்த சூழலில்தான் வேறுபட்டபண்பாடும்,சிந்தனைகளும் கொண்டகாலனியவருகைஅமைந்தது. உயர் தரமும்,அலங்காரச் சிறப்பும் கொண்டிருந்தகைப்பணிப் பொருள்கள் மீதுகாலனியர்களின் நாட்டம் அதிகரித்தது. அவற்றைத் தமக்குப் பொருத்தமானதாகமாற்றிக் கொள்ளவும்,வளர்த்தெடுக்கவும் காலனியஆட்சியாளர்கள் மேற்கொண்டமுயற்சிகள் மாவட்டத்தின் தூய கைவினைமரபுகளில் ஐரோப்பியபண்பாட்டின் தாக்கங்களைஉருவாக்கியது.

இத்தாக்கங்களில் இருந்துமட்டக்களப்புமாவட்டத்தின் கைவினைப் பாரம்பரியங்களைமீட்டெடுத்து,அவற்றின் சுதேசதன்மைகளைமீளுருவாக்கம் செய்யவேண்டியதுகாலத்தின் அவசியமாகஉள்ளது. நானூற்றுநாற்பத்து மூன்றுஆண்டுகள் நீடித்தகாலனியஆட்சிகள் வலுவானதாக்கங்களைசுதேசகைவினைகள் மீதுஏற்படுத்தியிருந்தது. காலனியஆட்சிகள் முடிவடைந்தபின்பும் அதன் தாக்கங்கள் நீடித்தன. இதனால் சுதேசசிந்தனைகளில் உருவானபாரம்பரியமரபுகள் மருவிப்போயின.

எனவேசுதேசமக்களின் தேவைகளுக்காகசுதேசகைவினையாளர்களால் உருவாக்கப்பட்டபாரம்பரியகைவினைகளிலும் அவைசார்ந்தநடவடிக்கைகளிலும் காலனியமும் அதன் கருத்தியல்களும் தாக்கங்களைஏற்படுத்தியுள்ளனஎன்பதையும்,அவைமீட்டெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் இவ்வாய்வின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. பாரம்பரியநுட்பங்களைப் பாதுகாத்துக் கொண்டு,அவைசேதமடையாதவாறுகாலத்தின் தேவைகளுக்கேற்பபாரம்பரியக் கைவினைஅம்சங்களைமாற்றியமைப்பதன் மூலம் அவற்றின் இருப்பைப் பேணமுடியும் என்பதுஆய்வாளரின் எதிர்பார்க்கையாகும்.

துணைநூல் பட்டியல்

[1] Ananda K,Coomaraswamy.(1956) Medieval Sinhalese Art, New York:pantheon books inc.
[2] Paul Goodman,and Frank Otto Gatel, (1970) The American Colonial Experience.Rinchart&Winston.Inc: London.
[3] சதானந்தன்,த.,ஆயிஷாஅப்துார் ர.்.மான்.*(Eds.),* Tradition or Trans/ Formation? Craft, Practice and Discourse (பக்.194-195).நுண்கலைத்துறை:யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்.
[4] தங்கேஸ்வரி,க.(2007) கிழக்கிலங்கைப் பூர்வீகவரலாறு. சென்னை:மணிமேகலைப் பிரசுரம்.
[5] தங்கேஸ்வரி,க.(2007) மட்டக்களப்புகலைவளம். சென்னை:மணிமேகலைப் பிரசுரம்.
[6] வெல்லவூர்க் கோபால்.(2005) மட்டக்களப்புவரலாறுஓர் அறிமுகம்.மட்டக்களப்பு: மனுவேதாபதிப்பு.
[7] நவரெத்தினம்,கு. (2007) இலங்கையில் கலைவளர்ச்சி. கொழும்பு-சென்னை:குமரன் புத்தக இல்லம்.

ஆய்வுச் சஞ்சிகைகள்

[1] இன்பமோகன்,வ. (2018)'காலனித்துவபின்காலனித்துவகருத்தியலுக்குள் பழங்குடியினரின் கலைகள்'.மொழிதல்.சுதந்திரஆய்வுவட்டவெளியீடு:மட்டக்களப்பு,தொகுதி- 5. எண்.2. (பக்:67-83).

இணையவழிக் கட்டுரைகள்

[1] Annemari de Silva. (2019, June). Craft Artisans & state institutions in Sri Lanka. International center for Ethnic studies. www.hppts://researchgate,net
[2] Dagmar Janikova. (2018). British Colonial Intervention and its consequences on Contemporary Sri Lanka. https://is.muni.cz.lk.British
[3] Navaratne,T.L., Ratnayake, R.M.A.K. (2015). Sustainability of small-scale traditional industries in Sri Lanka – With special reference to the handicraft industry. Sri Lanka
[4] Shyama Ranasignhe. (2016). A Historical Study of the Sri Lankan Economy During the Colonial Era. (ICSS. university of Kelaniya) https://repository.kln.ac.lk.
[5] ThamilAnanathavinayagam. (2019.May). Srilanka's history_ Colonialism_Independence_andconflict. www.researchgat.net/Publication.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்